ஸ்ரீ :

ஸ்ரீராமாநுஜன் 49.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 5	ஜனவரிமீ 1953 நந்தன ஹூ தைமீ	1 இதழ்

இராமானுச நூற்றந்தாதிப் பாசுரம் 49.

ஆனது செம்மையற நெறி * பொய்ம்மையறு சமயம்
போனது பொன்றி யிறந்தது வெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன்கழல் சென்னிவைத்துத்
தானதில் மன்னு மிராமானுசனித்தலத்துதித்தே.

எம்பெருமானார் இந்நிலவுலகத்தில் திருவவதரித்ததனாலே மூவகைப் பேறுகள் உண்டாயின. தருமமார்க்கம் செவ்வைக்கேடு நீங்கிச் செம்மை பெற்று விளங்கியது; *அறுசமயச்செடியதனை யடியறுத்தான் வாழியே* என்னும்படி பொய்யான புறச்சமயங்கள் சிதைந்தொழிந்தன. * கலியுங்கெடுங் கண்டு கொண்மின்* என்ற நம்மாழ்வாரருளிச் செயலும் மெய்யாகிப் பெரிய கிதயுகமாய்ப் பேரின்ப வெள்ளம் பெருகிற்று. இங்ஙனே செய்தருளின எம்பெருமானார் தாம் எப்படிப்பட்டவரென்னில்; திருக்காவேரியின் பரிஸரத்திலுள்ள வயல்களில் பூக்கின்ற தாமரை மலர்களினின்று பெருகும் மது வெள்ளமானது தனியே ஒரு நதியாகப் பெருகுமிடமான திருவரங்கம் பெரிய கோயிலில். வாழ்கின்ற ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளையே தமக்கு உஜ்ஜீவனமாகக் கொண்டவர். ....

"பூங்கமலத்தேன்."

நமது பத்ரிகையில் ஆரம்பம் தொடங்கி நூற்றந்தாதிப் பாசுரம் ஒவ்வோரிதழிலும் ஒவ்வொன்றாகப் பதிப்பிக்கப்பட்டு வரும் முறையில், நாற்பத்தொன்பதாம் பத்ரிகையான விதனில் நாற்பத்தொன்பதாம் பாசுரம் சுருக்கமான கருத்துடன் மேலே பதிப்பிக்கப் பெற்றது. மேலும் இவ்வண்ணமாகவே பதிப்பிக்கலாகும். இப்பாசுரத்தில் 'பூங்கமலத் தேன் நதிபாய்' என்றதை உயிராகக் கொண்டு சில விசேஷார்த்தங்கள் தெரிவிக்கிறேமிங்கு.

திருவரங்கமா நகரைச் சுற்றி வயல்கள் விளங்குவதும் அவற்றில் தாமரை மலர்கள் மலிந்திருப்பதும் அவற்றினின்று மகரந்த தாரைகள் வெள்ளமிட்டுப் பெருகுவதும் இயல்பே. இங்கு இவ்வளவு பொருளை மாத்திரமே கொண்டு 'பூங்கமலத் தேன் நதிபாய் வயல்' என்

றருளிச்செய்ததன்று. இதில் உள்ளுறை பொருள் ஆராயத்தக்கது. வயல்களில் நெல் முதலிய தானியங்கள் விளைந்து ஜீவன ஹேதுவாகின்றது; ஆகவே ஜீவனத்திற்குரிய பொருள்கள் விளையுமிடம் வயலென்று தேறிற்று. உடல் வாழ்வது ஜீவனமென்றும் உயிர் வாழ்வது உஜ்ஜீவனமென்றும் சொல்லப்படுகிறது. நெல் முதலிய பொருள்கள் உடல் வாழ்வதற்கு உரியவையாகின்றாப்போலே உபய வேதாந்த நூற்பொருள்கள் உயிர் வாழ்வதற்கு உரியவையாகின்றன. இவை விளையும் வயல்கள் எவையென்னில்; எம்பெருமானார் நியமித்தருளிய எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளே. கழனிகள் திருவரங்கமாநகரைச் சுற்றி விளங்குவதுபோல இவ்வாசிரியர்களும் கோயிலைச் சுற்றி வாழ்கின்றனர். வயல்களில் தாமரைப் பூக்கள் மலிந்திருப்பது போல இவ்வாசிரியர்களிடத்திலும் * ௨ஹு௦ விவரவு௦ வா வெஶ்ஶ௦ யதூ—ஷ்ணௗீக௦ வ–ஈஶயூஸ௦ஸூ—தஹ்ரம் விபாப்மம் பரவேச்மபூதம் யத் புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம் * என்று உபநிஷத்தும், * போதில் கமலவன்னெஞ்சம் * என்று பெரியாழ்வார் திருமொழியும், * பக்தாநாம் யத் வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம் * என்று கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்தியும் சொல்லியிருக்கிறபடியே ஹ்ருதயத்தினுள் ஒரு புண்டரீகமுள்ளது. அது மலர்ந்து அதனின்று திவ்யார்த்தங்களாகிற அமுத வெள்ளம் பெருகா நிற்கும். கமலத்தேன் வெள்ளத்தை வண்டுகள் பருகிக் களிக்கும்; * போந்த தென்னெஞ்சென்னும் பொன்வண்டு * என்று நூற்றந்தாதி தன்னிலேயே சொல்லுகிறபடி இவ்வமுதனார் போன்ற வண்டுகள் திவ்யார்த்தாம்ருத ப்ரவாஹத்தை ஆஸ்வாதனம் பண்ணி ஆனந்திக்கக் குறையில்லை.

அன்பர்களுக்கு அறிவிப்பு.

நமது ஸ்ரீராமாநுஜன் நான்கு பிராயம் நிரம்பி ஐந்தாவது பிராயத்தில் அடியிடும் நன்னாள் இந்நாள். இன்றுகாறும் இதனை அன்புடன் வளர்த்து வந்த பெரியார்கள் இனியும் வளர்க்கவேணுமென்று நாம் வேண்டிக்கொள்வது மிகையேயாம். அன்பர்கள் இன்புற்று வாசிக்கக்கூடிய வியாஸங்களை யுதவியும், சந்தாத் தொகையைக் காலத்தில் செலுத்தியும், தம்தம் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்ப்பித்தும் இங்ஙனே பலவகைகளாலும் இப்பத்திரிகையை விசேஷமாக அபிவிருத்தி செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

சென்ற வருஷத்திற் போல் சந்தாத்தொகையில் வாசி கிடையாது இவ்வருஷத்தில். அனைவர்க்கும் ஒரேவிதமாகவே ஐந்து ரூபா மட்டுமே. இந்த சந்தாத் தொகையைச் செலுத்துகின்ற அனைவர்க்கும் பன்னிரண்டு மாதங்களிலும் பத்திரிகை கிடைத்துவரும்.

பத்ரிகை கிடைக்கப்பெறாதவர்கள் இங்கிலீஷ் மாதத்தில் 25 தேதிக்குமேல் 'க்ரந்த மாலா ஆபீஸ், காஞ்சீபுரம்' என்ற விலாஸத்திற்கு எழுதக்கடவர்கள். முன்னதாகச் சந்தா செலுத்தாதவர்களுக்கும், 'விரைவில் சந்தா செலுத்துகிறோம்' என்று தபால் எழுதாதவர்களுக்கும் இப்பத்ரிகை இனி அனுப்பப்படமாட்டாது. 'சந்தாவை விரைவில் தவறாது அனுப்பிவிடுவர்கள்' என்று நமது திட நம்பிக்கைக்குப் பாத்திரமான சிலர்க்கு நாம் நிறுத்தாமலே அனுப்பி வருகிறோமெனினும் அவர்கள் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ... . (*)

ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலை.

நாலாயிர திவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் விசேஷார்த்த போதகங்களான ஐதிஹ்யங்களும் நிர்வாஹங்களும் அங்கங்கே காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் வரிசையாகத் திரட்டித் தனியே யொரு க்ரந்தமாக வெளியிட்டால் பலர்க்கும் நித்யாநுபவத்திற்குப் பயன்படுமென்று தோன்றி மூன்று வருஷங்களுக்கு முன்பு இப்பத்ரிகையிலேயே சிறிது சிறிதாக ப்ரசுரிக்க ஆரம்பித்து 12 பக்கங்கள் மாத்திரமே வெளியிடப்பட்டு நின்றுவிட்டது. அதை இப்போது முதலாயிரம் முழுமைக்கும் பூர்த்தி செய்து இதில் வெளியிட்டிருக்கிறோம். பெரிய திருமொழியாயிரத்திற்கும் இயற்பா ஆயிரத்திற்கும் பூர்த்தியாக அடுத்த பத்ரிகையில் வெளியிடுவோம். அதற்கடுத்த பத்ரிகையில் திருவாய்மொழியாயிரத்திற்கும் வெளியிட்டு முடிப்போம்.

திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்களில் அருளிச் செய்யப்பட்டுள்ள ஐதிஹ்யங்களையும் நிர்வாஹங்களையும் ஊன்றி நோக்குமவர்களுக்கு ஸம்ப்ரதாயார்த்தங்களில் தெளிவான ஞானமுண்டாவதுமன்றி விலக்ஷணமான ஆத்மானந்தமுமுண்டாகுமென்பதில் ஐயமில்லை. அநுதினமும் இதைப் பாராயணம் செய்யவேண்டியது ஸம்ப்ரதாய ரஸிகர்களுக்கு ஆவச்யகமாகும். சில ஐதிஹ்யங்கள் விவரணமில்லாமல் பொருள்படமாட்டாவென்று ஊடேயூடே நாம் விவரணங்களை யெழுதிப் பதிப்பித்து வந்தோம். நாச்சியார் திருமொழியில் ஐம்பது பாசுரம் வரையில் விவரணம் எழுதியிருக்கிறோம். இதனால் நூல் விரிவு பெரிதுமாகிறதென்று கண்டு மேல் பாகத்தை விவரணமில்லாமலே முடித்திருக்கிறோம். ஒருவாறு மூலத்தை முடித்துவிட்டுப் பிறகு அவசியமான விவரணங்களை வெளியிடுவோமென்று எண்ணமுள்ளது. [ஆனாலும் மிக அவசியமான இடங்களுக்கு விவரணமெழுதியே வெளியிடுவோம்.]

நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்களுக்கு ஐதிஹ்யங்களும் நிர்வாஹங்களுமே சிறந்த நிதியாயிருப்பதால் இவற்றைத் தனிப்புத்தகமாக வெளியிடுவது பலர்க்கும் பரமப்ரயோஜனமாகுமென்பது எமது துணிபு. இப்படிப்பட்ட நல்ல நிதிகள் வெளியாகும்படியான இப்பத்திரிகையின் இதழ்களைச் சோரவிட்டு விடாமல் ஸுரக்ஷிதமாகச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்து பிறகு ஒன்றுசேர்த்து முழுப்புத்தகமாக பயிண்டு செய்வித்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு:—இந்த ஐதிஹ்யநிர்வாஹரத்னமாலையின் பாரங்கள் 4. (பக்கங்கள் 32) இவ்விதழில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதிகமாகச் சந்தாபாக்கியுள்ளவர்களுக்கு மாத்திரம் இந்த பாரங்களைச் சேர்க்காமல் அனுப்புகிறோம். அவர்கள் உடனே சந்தாபாக்கியைச் செலுத்திவிட்டு அந்த நான்கு பாரங்களையும் வரவழைத்துக்கொள்வது. வாளா இருந்துவிடுகிறவர்களுக்கு அடுத்த பத்ரிகை அடியோடு நிறுத்தப்படும்.

ஆங்கிலப் பத்திரிகை

‘ஸ்ரீராமாநுஜ’ என்னும் பெயரால் ஆங்கிலபாஷையில் ஒரு பத்திரிகை நிகழும் ஜனவரிமீ முதல் ஆரம்பமாகிறது. இது மூன்று மாதங்களுக்கொருமுறை காஞ்சீபுரம் க்ரந்தமாலா ஆபீஸிலிருந்தே வெளிவரும். நமது தமிழ் ஸம்ஸ்க்ருதம் தெலுங்கு பத்ரிகைகளில் வெளிவரும் வியாஸங்களைக் காணும் மஹான்கள் “இப்படிப்பட்டவிஷயங்கள் ஆங்கில

பாஷையில் வெளிவந்தால் விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்தின் தத்துவங்களை லௌகிகர்களும் எளிதாகத்தெரிந்துகொள்வதற்கு மிகவும் அநுகூலமாகும்'' என்று அடிக்கடி தெரிவித்துக்கொண்டிருந்தபடியால் அன்னவர்களது த்ருப்திக்காகவே இவ்வாங்கில பத்திரிகை ஆரம்பமாகிறது. நம்முடைய ஸம்பிரதாயத்தையும் ஆங்கில பாஷையையும் நன்கறிந்த பல மஹான்களின் உதவியினால் இப்பத்ரிகை வெளிவருகிறது. அப்படிப்பட்ட உதவியாளர்களில் ஸ்ரீமான்களான **A.** ஸம்பத்குமாராசாரியர் M.A., **S.** ரங்கஸ்வாமி ஐயங்கார் M.A., (புனா), **N.** ஜீயப்பங்கார் (காஞ்சீபுரம்) இவர்கள் முன்னிற்பவர்கள். இது விரைவில் மாதப்பத்ரிகையாக மாறிவிடும். இதற்கு வருடச்சந்தா 2 ரூ. மட்டுமே. கிடைக்குமிடம் க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.


ந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகையைப்பற்றின ஓர் அறிக்கை.

ஸ்ரீ அஹோபிலமடத்தின் சார்பாக நடைபெற்றுவரும் ந்ருஸிம்ஹப்ரியாவென்னும் மாதப்பத்ரிகையில் வெளிவரும் விஷயங்களை இதுவரை நாம் ஆராய்ந்து வந்ததில் பெரும்பாலும் அஸம்பத்தங்களான விஷயங்கள் அதில் வெளிவருகின்றனவென்று விரிவான நிரூபணங்களுடன் அடிக்கடி வெளியிடப்பட்டு வருவதை ஆப்தர்களான உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் ஆழ்ந்து பரிசீலித்து ஆமோதித்து வருவதை உலகம் அறிந்திருக்கின்றது. நாம் செய்துவருகிற நிரூபணங்கள் யாவும் ஹிதபுத்தியினாலல்லது தூஷணபுத்தியினாலல்லவென்பதையும் மத்யஸ்தர்களான மஹான்கள் நன்கறிந்துள்ளார்கள். தத்துவம் இப்படியிருந்தும் அந்த பத்ரிகை கம்பீரமான ஸரணியை ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை. ஸ்ரீமான் உ-வே. வித்வான் காளி. ரங்காசாரியர் ஸ்வாமி மடத்து ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். பிரபல வித்வான். பிராமாணிகாக்ரேஸரர். அந்தஸ்வாமி, ஸமீபகாலத்தில் நமக்கு எழுதியிருந்த வொரு ஸ்ரீமுகத்தில் "நான் ந்ருஸிம்ஹப்ரியாவைப் பார்ப்பதேயில்லை; அதை எனக்கு அனுப்பவேண்டாமென்றும் பல வருஷங்களுக்கு முன்னமே தெரிவித்து நிறுத்திக்கொண்டேன்" என்று எழுதியிருந்தார். அந்த ஸ்ரீமுகத்தை ஸேவித்தபோது நமக்கும் அந்த அத்யவஸாயமே உறுதியாக உண்டாயிற்று. உடனே ந்ருஸிம்ஹப்ரியா கார்யாலயத்திற்குத் தெரிவித்துக்கொண்டோம்—"இனி உங்கள் பத்ரிகையை நமக்கு ஒரு நாளும் அனுப்பவேண்டா" என்று. இவ்விஷயத்தை நாம் உலகத்திற்கும் இதனால் பிரசுரப்படுத்துகிறோம். இனி நாம் நமது வாழ்நாளில் அப்பத்ரிகையை ஒருநாளும் பார்க்கவில்லோம். இனி அப்பத்ரிகை எதுவேணுமானாலும் தாராளமாக எழுதிக்கொண்டிருக்கலாம். அதைப்பற்றி நமக்கு இனி யாதொரு கவலையும் கிடையாது. உத்யாநபத்ரிகையைப்பற்றி இங்கு நாம் புதிதாக எழுதவேண்டியதொன்றுமில்லை. அப்பத்ரிகையும் ஸ்வச்சந்தமாக எதையும் எழுதிக்கொண்டிருக்கலாம்.

இனி அன்பர்கள் நம்மூலமாக லோகபிராமமான அமுத வெள்ளங்களையே பெற்றுப் பருகலாம்.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐதிஹ்ய நிர்வாஹ ரத்நமாலா.

ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் தொகுத்தது.

—:o:—

நாலாயிர திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் பலபல ஐதிஹ்யங்களும் நிர்வாஹங்களும் பெரியவாச்சான்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலான பூருவாசாரியர்களால் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. அவை விசேஷித்து அநுஸந்திக்கத் தக்கவையாய் அடிக்கடி மனனம் பண்ணத்தக்கவையா யிருப்ப தால் அவை யெல்லாம் திரட்டி ஒருங்கே சேர்க்கப்படுகின்றன. திருப்பல் லாண்டு முதற்கொண்டு வியாக்கியானங்களிலுள்ள ஐதிஹ்யங்களும் நிர்வா ஹங்களும் விசேஷித்த ஆசார்ய ஸ்ரீஸூக்தி மேற்கோள்களும் வரிசையாக எடுத்துக் கோக்கப்படுகின்றனவிதில். கதையோடு கூடிய அர்த்த விசேஷங் களை ஐதிஹ்யமென்றும், "இதற்கு ஆளவந்தாரருளிச் செய்யும்படி; இங்கு எம்பெருமானாரருளிச் செய்யுபடி; என்று பட்டரருளிச் செய்தார்" என்று காட்டும் அர்த்த விசேஷங்களை நிர்வாஹமென்றும் பெரியார் வழங்குவர். இவை யிரண்டும் இதிலேயடங்கும். விவரிக்க வேண்டிய அவச்யமுள்ள விடங்களில் விவரணமும் சிறிது செய்யப்படும். ... ... *

திருப்பல்லாண்டு 4 ஏடு நிலத்தில்

(ஏடுநிலத்தில்.) ஏடு என்பது பொல்லாங்கு. 'உங்களைப் பொல்லா நிலத்திலே யிடுவதற்கு முன்னம்' என்று பிள்ளையமுதனார்.

திருப்பல்லாண்டு 10 எந்நாளெம்பெருமான்.

(ஐந்தலையபைந்நாகத்தலைப்பாய்ந்தவனே!.) க்ருஷ்ணாவதாரமென்றால் ஆழ்வார்க ளெல்லாருமாகப் பரிவராயிருப்பர்கள்; இதுக்கடியென்? என்று ஜீயர் பட்டரைக் கேட்க; ராமாவதாரத்தில் பிள்ளைகள் தாங்கள் மிடுக்கராய் குணாதிகருமாய், பிதா சம்பராந்தகனு மாய், மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளுமாய், ஊர் அயோத்யையுமாய், காலம் நல்லடிக்கால முமாயிருக்கையாலே அங்குத்தைக்கு ஒரு பயமில்லை; இங்கு, வந்துபிறந்தவிடம் சத்ருக்ருஹமாய், கம்ஸன் இடம்பார்த்து நலியும் துஷ்ப்ரக்ருதிகளை வரக்காட்டும் க்ரூரனுமாய், தமப்பன் இடையனுமாய், ஊர் இடைச்சேரியுமாய், பிள்ளைகள் தாங்கள் தீம்பருமாய், காலம் கலிகாலத்தோடு தோள் தீண்டியாயிருக்கையாலே என் வருகிறதோ வென்று பரிகைக்கு ஆழ்வார்களல்லதில்லைகாணும் என்றருளிச் செய்தார். ...

[குறிப்பு :—திருப்பாவை. 16. நாயகனுய்நின்ற பாசுரத்தின் வியாக்யானத்தில் (மூவாயிரப்படியிலும் ஆறாயிரப்படியிலும் இவ்விஷயம் ஐதிஹ்யமாகவல்லாமல் ஸ்வவாக்ய ரீதியில் அருளிச்செய்யப்பட்டுள்ளது.]

"த்ரேதாயுகமாகையாலே காலமும் நல்லடிக்காலமாய் தமப்பனார் சம்பராந்தகனுமாய் பிள்ளைகள் தாங்களும் ஆண் புலிகளாய், அவர்கள் தாம் வழியேபோய் வழியே வருமவர்களுமாய் மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளாய், ஊரும் திருவயோத்யையாய்............காலம் கலிக்குத் தோள்தீண்டியான த்வாபராந்தமாய், தகப்பனார் ஸாது ஸ்ரீநந்தகோபராவது, இவர்கள் சிறுபிள்ளைகளாவது, அதிலே தீம்பராவது, ஊர் இடைச்சேரியாவது, அதுதான் கம்ஸன்படைவீட்டுக்கு அடுத்தணித்தாய் அவனுக்கு இறையிறுக்கு மூராவது, கம்ஸன்தான் சத்ருவாவது, எழும் பூண்டெல்லாம் அஸுரமயமாவது; ஆனபின்பு பயம் கெட்டோ இருக்கிறது?" என்று.

பெரியாழ்வார் திருமொழி 2—1. 1. மெச்சூது சங்கம்

(மணவாள மாமுனிகளின் வியாக்கியானம்.)

(அத்தூதனப்பூச்சி காட்டுகின்றான்.) இவ்விடத்தை உய்ந்தபிள்ளை (ஆ)பாடா நிற்க, திருவோலக்கத்திலே அத்தூதனென்று பெருமாளைக் காட்டுவது, அப்பூச்சி யென்று கண்ணை யிறுத்துக்கொண்டு வருவதாய் அபிநயிக்க, உடையவர், பின்னே ஸேவித்தெழுந்தருளியிருந்த எம்பார் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக்காட்ட, அவரும் அப்படியே அபிநயித்துக் கொண்டுவர, 'இதுக்கடியென்?' என்று விசாரித்துப் புரிந்து பார்த்தருளி 'ஸ்ரீ கோவிந்தப் பெருமாள்! இருந்தீரோ?' என்றருளிச் செய்தாரென்று ப்ரஸித்தமிறே.

[விவரணம்;—இக்காலத்திலும் பாலலீலைகளில் (அப்) பூச்சி காட்டுகையென்று ஒன்றுண்டு. அதாவது, கண்ணையிறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது முதலாகச் செய்யும் பயங்கரமான சேஷ்டைகள். இப்பாசுரம் நம்பெருமாள் ஸன்னிதியில் சிறிய திருவத்யயநோத்ஸவத்தில் அரையர்ஸேவையில் வந்தபோது, உய்ந்தபிள்ளை என்னுமரையர் 'அத்தூத னப்பூச்சி காட்டுகின்றான்' என்னுமிடத்தை அபிநயித்துக் காட்டுகையில், அத்தூதன் என்பதற்கு இலக்காக எதிரே யெழுந்தருளியிருக்கிற நம்பெருமாளைச் சுட்டிக்காட்டிவிட்டு அப்பூச்சிகாட்டுகின்றா னென்பதற்கு கண்ணிமையை மடக்கி இக்காலத்துச் சிறுவர்கள் பூச்சி காட்டுகிறவிதமாகவே அபிநயித்துக் காட்டினார். அந்த கோஷ்டியில் உடையவரும் அவர் பின்னே எம்பாரும் எழுந்தருளியிருந்தார்கள். அரையர் இப்படி அபிநயம் செய்வதைக் கண்ட எம்பார் கண்ணபிரான் அப்பூச்சி காட்டினவிதம் இதுவல்லவென்று, தாம் கொண்டதை அரையர்க்குத் தெரிவிப்பதற்காகத் தம்முடைய திருக்கைகளைத் தம்திருத்தோள்மேல் வைத்து ஸூசனையாகக் காட்டினார். சங்கு சக்கரங்களுடனே அவதரித்த கண்ணபிரான் *உபஸம்ஹர விச்வாத்மந் ரூபமேதச் சதுர்புஜம்* என்ற கோரிக்கையின்படி அப்போது மறைத்துக்கொண்ட சங்கு சக்கரங்களை ஆயர்சிறுமியர்க்கு அடிக்கடி காட்டி அச்சத்தை விளைவித்தானென்பதே அப்பூச்சிகாட்டுகின்றானென்பதற்குக் கருத்து' என்பதை எம்பார் ஸூசனையாகத் தெரிவித்தபடி. இக்குறிப்பைத் தெரிந்துகொண்ட அரையர் தாம் முன்பு அபிநயித்த ரீதியை விட்டு எம்பார் காட்டியது போலவே அபிநயிக்க, உடையவர் மிகவுகந்து, முதலில் வேறுவிதமாக அபிநயித்த அரையர் இப்போது இவ்விதமாய் அபிநயித்ததற்குக் காரணம் எம்பாருடைய ஸூசனையாகவே யிருக்கவேணுமென்று கருதி திரும்பிப் பார்த்து எம்பாரே! இருக்கிறீரோ? என்றாராம். தூதனுய்த் தன் ஸௌலப்யத்தை வெளியிட்டதுபோல் மற்றும் பல பல ப்ரகாரங்களினால் தன் எளிமையை வெளியிட்டு இவன் நம்மிலே ஒருவன் என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி யிருப்பவனான கண்ணபிரான் சில ஸமயங்களில் அவர்கள் அஞ்சும்படி ஈச்வரத்வ சின்னங்களைக் காட்டுகிறா

னென்பதே "அத்தூதனைப் பூச்சிகாட்டுகின்றான்" என்கிறவிடத்திற்கு விவக்ஷிதம்—என்று விளக்கப் பட்டதாயிற்று.]

பெரியாழ்வார் திருமொழி 3—6—3. வானிளவரசு.

(வானிளவரசு.) திருவனந்தாழ்வான்மடியிலும் ஸ்ரீ ஸேனாபதியாழ்வான் பிரம்பின் கீழிலும் பெரிய திருவடி சிறகின்கீழிலுமாய்த்து இத்தத்வம் வளருவது—என்றிறே பட்டர் அருளிச் செய்வது.

பெரியாழ்வார் திருமொழி 3—8—4. ஒருமகள்தன்னையுடையேன்

ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளினபோது உடையவர், விச்லேஷம் பொறுக்க மாட்டாமல் "ஒருமகள் தன்னையுடையேன்" என்றும் "உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன்" என்றும் "செங்கண்மால்தான்கொண்டுபோனான்" என்றும் அருளிச் செய்தா ரென்று ப்ரஸித்தமிறே. * உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ் ஸதாபவத் * என்கிறபடியே ஸாதுக்களுக் கெல்லாம் உபமாந பூமியாகச் சொல்லலாம் படியிருக்கையாலே உலகம் நிறைந்த புகழுள்ளது ஆழ்வானுக்கேயிறே.

பெரியாழ்வார் திருமொழி 3—9. என்னாதன் - ப்ரவேசம்

* மானமரு மென்னோக்கி யென்கிற (பெரிய திருமொழி 11-5.) திருமொழியிலே இரண்டு பிராட்டிமார்தசை ஏககாலத்திலே கூடும்படி என்? என்று ஜீயர் பட்டரைக்கேட்க, தேசவிசேஷத்தில் அநேக சரீர பரிக்ரஹம் ஏககாலத்தில் கூடுகிறபடி யெங்ஙனே? அப்படியே இவரையும் பார்த்து அருளினால் கூடும் என்றருளிச் செய்தா ரென்று ப்ரஸித்தமிறே.

பெரியாழ்வார் திருமொழி 3-9-4 மாற்றுத்தாய் சென்று.

(கூற்றுத்தாய் சொல்ல.)..................முற்பட்டயோஜனை நாலூர்பிள்ளையிட்டருளின வ்யாக்கியாந ப்ரக்ரியை. பிற்பட்டயோஜனை பிள்ளையிட்டருளின வ்யாக்யாந ப்ரக்ரியை. முற்பட்ட யோஜனையில் * சென்று வனம்போகே * என்கிறவிதுக்கு ஸ்வரஸார்த்தம் ஸித்திக்கையும், * கூற்றுத்தாய் சொல்லக் கொடியவனம்போனவிது "தண்டகம் நூற்றவள் சொற்கொண்டுபோகி" என்றும் "குலக்குமரா காடுறையப்போ வென்று விடைகொடுப்ப இலக்குமணன் தன்னொடுமங்கேகியது" என்றும் "கொடிய வள்வாய்க் கடிய சொற்கேட்டு—கான்தொடுத்த நெறிபோகி" என்றும் கீழ்மேல் அருளிச்செய்தவற்றுக்குச் சேர்ந்திருக்கையுமுண்டு. ஸம்ப்ரதாயத்திலும் வந்தால், நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே கேட்ட நாலூர்பிள்ளையருளிச் செய்ததாகையாலே வந்த ப்ராபல்யமுண்டு. அவர்தாம் ஆச்சான்பிள்ளை திருத்தமப்பனாராகையாலே பிள்ளைக்குப் பரமாசார்யருமிறே. ஆகையாலே அந்த யோஜனை முற்படவெழுதி பிள்ளையருளிச் செய்த யோஜனை பிற்பட எழுதப்பட்டது.

பெரியாழ்வார் திருமொழி 4-1-4. தோயம்பரந்த.

(மாயக்குழவியதனை.) சிறுவடிவைக் கொண்டு பெரியலோகங்களை வயிற்றிலே வைத்து ஒரு பவனை ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்தியத்தால் வந்த ஆச்சர்யத்தையுடைய அந்த குழவியை. * முக்தச் சிசுர் வடதளே சயிதோதிதங்வா தங்வா ஜகந்தி பிப்ருஷே ஸவிகாஸமேவ, ஐசீமிமாந்து தவ சக்திமதர்க்கிதவ்யாம் அவ்யாஜத: ப்ரதயஸே கிமிஹாவதீர்ண:.* என்றாரிறே ஆழ்வான்.

பெரியாழ்வார் திருமொழி 4-1-9. நாழிகை கூறிட்டு.

(ஆழிகொண்டன்றிரவி மறைப்ப.) நிரவதிக தேஜோரூபமான திருவாழியாலே ஆதித்யனை மறைத்தால் லோகத்துக்கு மிகவும் வெளிச் செறிப்புண்டாமத்தனையன்றோ?

ஆதித்யன் அஸ்தமித்தா னென்னும்படி கண்களுக்கு இருண்டு தோற்றுவானென்னென்னில்; இந்த ஆதித்யனுடைய தேஜஸ்ஸு கண்ணாலே முகக்கலாம்படி அளவுபட்டிருக்கையாலே தமஸ்ஸு போம்படியாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு நேர்கொடுநேர் கண்கொண்டு பார்க்க வொண்ணாதபடி மிக்கிருக்கையாலே பளபளத்துக் கண்ணையிருளப் பண்ணிற்று; இதுதான் "ஆழியாலன்றங்காழியை மறைத்தான்" (பெரிய திருமொழி 5—7—8) என்கிறவிடத்திலே பூர்வர்கள் அருளிச் செய்தார்களிறே.

*[குறிப்பு; இங்கே பூர்வர்கள் என்றது பெரிய வாச்சான்பிள்ளையை. அவருடைய திவ்யப்ரபந்த வியாக்கியானங்களிலிருந்து எடுத்துக் காட்டுமிடங்களிலெங்கும் மணவாள மாமுனிகள் பூர்வர்கள் என்றே நிர்தேசித்தருள்வது ரஹஸ்யவியாக்கியானங்களிலும் பலவிடங்களிற் காணத்தக்கது. மிகவும் அவசியமாகத் திருநாமத்தைக் குறிப்பிட்டேயாகவேண்டிய நிர்ப்பந்தமுள்ள விடங்களில் மாத்திரமே பெரியவாச்சான்பிள்ளை யென்று நாம நிர்தேசம் செய்தருள்வது; உபதேச ரத்தினமாலையில் மூன்று பாசுரங்களிலும் தத்வத்ரய வியாக்கியானத்தில் ஓரிடத்திலும் அது காண்க.]

பெரியாழ்வார் திருமொழி 4—2—5. ஒருவாரணம்.

(கருவாரணம்......திரியும்) அழகர் திவ்யாஜ்ஞைக்கு இளைத்து போகமாட்டாமல் மீளும். * ஸுந்தரதோர்திவ்யாஜ்ஞாலம்பந (லங்கந) காதரவசாநுயாயிநி கரிணி, ப்ரணயஜகலஹஸமாதிர் யத்ர வநாத்ரிஸ் ஸஏஷ ஸுந்தரதோஷ்ண; * என்று இந்த வ்ருத்தாந்தத்தையருளிச் செய்தாரிறே ஆழ்வான்.

பெரியாழ்வார் திருமொழி 4—2—7. மன்னர் மறுக.

(கோன்னவில் கூர்வேல் கோனித்யாதி.) மலயத்வஜ சக்ரவர்த்தி திருமாலிருஞ்சோலைச் சிலம்பாற்றிலே நீராடி ப்ரவணனாயிருந்த புராணவரலாறு இங்கு விரிவாக அருளிச் செய்யப்பட்டிருப்பது காண்க.

பெரியாழ்வார் திருமொழி 4—4—1. நாவகாரியம்.

(நாவகாரியஞ் சொல்லிலாதவர்.) கொங்கிலே திருக்குருகைப்பிரான் பிள்ளானெழுந்தருளி ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் திருமாளிகையிலே விட்டவளவிலே பிறந்த வார்த்தையை ஸ்மரிப்பது அனந்தாழ்வான் சரமஸமயத்திலே பட்டர்உகக்குந் திருநாமமேது? என்று கேட்க, அழகிய மணவாளப் பெருமாளென்கிற திருநாம மென்று சொல்ல, இது பர்த்ரு நாமக்ரஹணம் பண்ணுமாபோலே யிராநின்றது; ஆகிலும் பட்டர் விரும்பின திருநாமமன்றோ வென்று இத்திருநாமத்தைச் சொன்னவனந்தரத்திலே திருநாட்டுக்குப் போனார். உடையவரெழுந்தருளியிருக்கிற காலத்திலே வடுகநம்பியருகே ஒரு ஸ்ரீ வைஷ்ணவரெழுந்தருளியிருந்து 'ஓம் நமோ நாராயணாய' என்று இத்தைச் சொல்ல, இத்தைக்கேட்ட வடுகநம்பி 'நாவகாரியம்" என்றெழுந்து கடக்கப்போனார். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் சரம காலத்திலே உடையவரெழுந்தருளி இப்போது திருவுள்ளத்தில் அநுஸந்தானமேதென்று கேட்க, பகவந் நாமங்களாயிருப்பன அனேகம் திருநாமங்களுண்டாயிருக்க திருவரங்கம் என்கிற நாலெந்து திருவக்ஷரமும் கோப்புண்டபடியே! என்று நினைத்திருந்தேன் காணும் என்றருளிச்செய்ய, அத்தை ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் விரும்பின திருநாமமென்று உடையவர் விரும்பியிருப்பர்.

[குறிப்பு:—இவ்வைதிஹ்யங்கள் இங்கு அருளிச்செய்யப் ரஸக்தி யேதென்னில், மூலத்தில் 'நாஅகாரியம்' என்றுள்ளபடியால் நாவுக்குக் கார்யம் இன்னது, அகார்யம் இன்னது என்பதை விவரித்துக் காட்டுகிற முறையில் அருளிச்செய்யலாயின. நாவகாரிய மென்கிற இத்திருமொழியின் வியாக்கியானத்திற்காணும் ஐதிஹ்யங்கள் பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியானப் பகுதிகளென்று அரும்பதவுரைகாரர் காட்டியுள்ளார்.]

பெரியாழ்வார் திருமொழி 4—4. 7. குருந்த மொன்று.

(இருந்த வூரிலிருக்கும் மானிடர்) ஆழ்வானுக்கு, ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் திருவடிச் சார்ந்தாரென்று விண்ணப்பஞ்செய்ய, பாகவத கைங்கர்யமே யாத்ரையாய்ப் போந்த வரை அப்படிச் சொல்லலாகாது; திருநாட்டுக்குப் போனாரென்று சொல்லவேணுங் காணுமென்றருளிச் செய்தாராம். ஸ்ரீவைஷ்ணவர்களை நீராட வென்றும் ஆசார்யனைத் திருமஞ்சனம்பண்ண வென்றும் சொல்லுகிறது உத்தேச்யதாரதம்யத்தையிட்டிறே. வடுகநம்பி திருநாட்டுக்குப் போனாரென்று ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அருளாளப் பெருமாளெம் பெருமானார்க்கு விண்ணப்பஞ் செய்ய, சிறிதுபோது மோஹித்துக் கிடந்து உணர்ந்தருளி அவரைப் பார்த்து, திருநாட்டுக்குப் போனாரென்னலாகாது காணும்; உடையவர் ஸ்ரீ பாதத்துக்குப் போனாரென்ன வேணுங்காணும் என்றருளிச் செய்தாராம். ஸ்ரீசபரியும் பெருமாள் திருவடிகளிலே ப்ராத்தித்தது இதுவிறே. ஆழ்வான் ஸம்ஸாரத்தில் ஆர்த்தியின் கனத்தாலே கலங்கிப் பெருமாள் திருவடிகளிலே, அடியேனைத் திருநாடேறப் போம்படி திருவுள்ளமாகவேணுமென்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாள் திருவுள்ளமாய் ஆழ்வார்திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகையிலே புறவீடு விட்டிருக்கிற வளவிலே, இத்தை உடையவர் கேட்டருளி, பஞ்சுக்கொட்டன திருவாசலளவாக வெழுந்தருளி, பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்தால் விண்ணப்பஞ்செய்தது பெருமாளுஞ் செய்தருளுவர்; நாமடியாகப் பெருமாள் இரண்டு வார்த்தை யருளிச்செய்தாராக வொண்ணாதென்று மீண்டும் ஆழ்வானிருக்கிறவிடத்தேற வெழுந்தருளி 'ஏன் ஆழ்வான்!' என்ன, அடியேன் மறந்தேனென்று விண்ணப்பஞ் செய்தான்.

பெரியாழ்வார் திருமொழி 4—4—9. கொம்பினார் பொழில்.

(நம்பனை நரசிங்கனை) எம்பார் அருளிச்செய்யும் வார்த்தை—ஈச்வரனுக்கு மூன்று ஆபத்து வந்து கழிந்ததென்று அருளிச் செய்வர். அதாவது—த்ரௌபதிக்கும் ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கும் ஸ்ரீ ப்ரஹ்லாதனுக்கும் உதவிற்றிலனாகில் ஸம்ஸாரிகள் ஈச்வர தத்வமில்லையென்றெழுதியெழுத்திடுவர்களிறே.

பெரியாழ்வார் திருமொழி 4—6—4 உச்சியிலெண்ணெயும்.

(எம்பிரான் திருநாமமே நச்சுமின்) ஒரு ப்ராஹ்மணன் தன் பிள்ளையைப் பேரிடுகிற ஸமயத்திலே ஐச்வர்யம் தரவல்லானொருவன்பேரிடவேணுமென்ன, வைச்ரவணன் பேரையிடு என்றவளவிலே ஐளிபிளி என்று இட்டழைத்து ஜீவிப்பதில் நாராயணன் என்கிற திருநாமத்தைச்சாற்றி பிக்ஷைபுக்கு ஜீவிக்க வமையுமென்றானென்று ஆச்சான் பிள்ளையருளிச்செய்ததாகப் பிள்ளையருளிச்செய்வர்.

(விவரணம்:—அமரகோசத்தில் குபேரனுடைய நாமங்களைக் கூறிவருமிடத்து * யக்ஷைக பிங்கைலபில ஸ்ரீத புண்யஜநேச்வரா: * என்று 'ஏலபில:' என்பதும் குபேர நாமமாகக் கூறப்பட்டுள்ளது. ஏலபிலனுடைய மகன் என்கிற பொருளில் 'ஐலபில:' என்றாகும். இந்த விவக்ஷையாலே ஐளிபிளி யென்று பெயரிட விரும்பினபடி)

பெரியாழ்வார் திருமொழி 4—8—8 வல்லெயிற்றுக்கேழலுமாய்

(கேழலுமாய்) வராஹகல்பம் வாசியா நிற்கச்செய்தே, ஸ்ரீ வராஹநாயனார்க்கு முத்தக்காசை அமுதுசெய்விப்பதென்று கிடந்ததாய் இதென்ன மெய்ப்பாடுதானென்று நஞ்சீயர் வித்தராயருளுவரென்று ப்ரஸித்தமிறே.

(விவரணம்;—முத்தக்காசு என்பது கோரைக்கிழங்கு. முஸ்தா என்பது ஸம்ஸ்க்ருத நாமம். வராஹப்பெருமாளுக்கு அர்ச்சையில் முஸ்தாசூர்ண மமுதுசெய்யப் பண்ணும்படி சாஸ்த்ரவிதியிருப்பதோடு ஸ்ரீமுஷ்ணம்முதலான வராஹ க்ஷேத்திரங்களில் அநாதியான அனுஷ்டானமுமுண்டு.)

பெரியாழ்வார் திருமொழி 4—9—3 கருளுடையபொழில்.

(அணியரங்கமே.) பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் ப்ரதக்ஷிணம் பண்ணு நிற்கப் பின்னே ஸேவித்துக்கொண்டுபோனேன்; அல்லாதாரெல்லாரும் கடுங்குதிரை போலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களேயும் திருமாளிகைகளேயும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்து மகிழ்ந்துகொண்டு வருகிறபடியைக்கண்டு, அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயலொத்திருக்க இவர்களான வாசிதோற்ற விருந்தபடியென்! என்றிருந்தேன்காணுமென்று நஞ்சீயர் நம்பிள்ளைக்கருளிச் செய்தாரென்று ப்ரஸித்தமிறே.

பெரியாழ்வார் திருமொழி 4—9—6 மைத்துனன்மார் காதலியை.

(மயிர் முடிப்பித்து) * இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி * என்ற வோபாதி * இதம் தே நாதபஸ்காய * என்கிற விதுவும் முன்னே சொல்லிக் கொள்ளவிறேயடுப்பது; அங்ஙன் செய்யாதே முந்துற அர்த்தத்தை யருளிச் செய்துவைத்துப் பின்னை இத்தை யருளிச் செய்வானேன்? என்று ஜீயர் பட்டரைக் கேட்க, த்ரௌபதி குழல் விரித்துக் கிடக்கையாலே செய்வதறியாமல் மூலேயிலே கிடந்தாரை முற்றத்திலே யிடுவாரைப் போலே பரம ரஹஸ்ய மானத்தை வெளியிட்டுக்கொண்டு நின்றான்; பின்னை அர்த்தத்தின் சீர்மையை அநுஸந்தியா, கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே போகட்டோமென்று பதண்பதணென்றான் காணும் என்றிறேயருளிச் செய்தது

பெரியாழ்வார் திருமொழி 4—10—10 மாயவனை மதுசூதனனை.

(மறையோர்களேத்தும்) மேன்மைக்கு அமரரேறு என்னுமாபோலேயிறே நீர்மைக்கு ஆயர்களேறென்கிறவிது. பெரிய பெருமாளை க்ருஷ்ணாவதாரமாகவிறே நம் பூர்வாசார்யர்கள் அநுஸந்திப்பது. * கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ யுண்டவாயன் என்னுள்ளங் கவர்ந்தானை * என்றாரிறே திருப்பாணாழ்வார். திருப்பவளத்தை மோந்து பார்த்தால் இப்போதும் வெண்ணெய் மணக்குமாய்த்து. * கூர்ம வ்யாக்ரநகபரிமிளத்பஞ்சஹேதீ யசோதாநத்தா மௌக்த்யாபரணமதிகம் நஸ் ஸமாதிம் திநோதி * என்று-யசோதைப்பிராட்டி பிள்ளைப் பணியாகச் சாத்தின திருவாபரணம் இப்போதும் பெரிய பெருமாள் திருக்கழுத்திலே கிடக்கிறதென்று கண்டநுபவித்தாரிறே பட்டர். ஆகையால் இவ்விடத்தில் * மறையோர்களென்கிறது - திருப்பாணாழ்வார் பட்டர் போல்வாரானவர்களை.

பெரியாழ்வார் திருமொழி 5—2—4 மங்கிய வல்வினை.

(இங்குப்புகேல்மின்.) இங்கு என்று திருப்பல்லாண்டோடே அந்வயமுடையாரெல்லாரையும் கூட்டிக் கொள்ளுகிறாரென்று பட்டர்.

பெரியாழ்வார் திருமொழி 5—4—3 எம்மனாவென்குல.

(எம்மனா இத்யாதி.) எம்மனா, என்குல தெய்வமே, என்னுடைய நாயகனே! என்கிற இம்மூன்றாலும்—ஜ்ஞாநவிரோதியும் ஆச்ரயண விரோதியும் மோக்ஷ விரோதியும் போனபடி யென்று ஆளவந்தார். தேஹாத்மாபிமாநமும் அந்யசேஷத்வமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமுங் கழிந்தபடி யென்று உடையவர். உபாயமும் உபேயமும் பரதேவதையும் என்றுமாம்.

அப்பாட்டிலேயே, (தூறுகள்பாய்ந்தனவே) தூறு என்கிறது ஸம்ஸாரிகளையென்று திருக்கோட்டியூர்நம்பியருளிச் செய்வர்.

பெரியாழ்வார் திருமொழி 5—4—4 கடல்கடைந்தமுதம்.

(நிறைத்துக் கொண்டேன்) * நெஞ்சிடிந்துகுமென்று நெஞ்சுமழிந்து, உடலுமுருகுமென்று இட்டகரையுமழிந்து ஸ்வரூபமும் அளவுபட்டிருக்க இவர் தேக்கிக் கொண்டபடி எங்ஙனேயென்று ஜீயர் பட்டரைக் கேட்க, * விட்டுசித்தன்மன மென்று அவ்வம்ருதம் வியாபித்தவிடமெல்லாம் திருவுள்ளம் வ்யாபிக்குமென்று அருளிச்செய்தார்.

பெரியாழ்வார் திருமொழி 5—4—11 வேயர்தங்கள்.

(சாயைபோலப்பாட வல்லார் தாமுமணுக்கர்களே) எம்பாரைச்சிலர் இப்பதத்துக்குப் பொருளென்? என்று கேட்க, நான் உடையவர் ஸ்ரீபாதத்திலே இது கேட்டிலேன், ஆகிலும் நீங்கள் கேட்டவர்த்தம் போராதென்னவெண்ணுது; இப்போதே கேட்டு உங்களுக்குச் சொல்லவொண்ணுதபடி உடையவரும் திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்தேறவெழுந்தருளினுர்; ஆகிலும் உங்களுக்கு இப்போதே சொன்னேனுகவேணும்...... என்று உடையவர் திருவடி நிலைகளை யெடுத்துத் தம்திருமுடியிலே வைத்துக்கொண்டு, "இப்போது உடையவரெனக்கருளிச் செய்தார், கேட்கலாகாதோவென்று "பாடவல்லார், சாயைபோல தாமும் அணுக்கர்களே" என்றருளிச்செய்தார்.........சாயைபோலப் பாடவல்லார்; நிழலாவது குளிர்த்தி; குளிரப் பாடவல்லார் என்றுஞ் சொல்லுவர்கள்.

[விவரணம்;—பண்டு எம்பெருமானுர் திருக்கோட்டியூர் நம்பியைத் திருவடி தொழுவதற்கென்று அங்கு எழுந்தருளின காலத்தில் சிலர் எம்பாரிடம் வந்து "சாயைபோலப் பாடவல்லார்" என்ற அடியின் கருத்தையருளிச் செய்யவேணுமென்று பிரார்த்திக்க, அதற்கு எம்பார் 'நான் எம்பெருமானுரிடத்தில் இதன் பொருளைக் கேட்டுணர்ந்ததில்லை; இப்போது அவரைக் கேட்டு உங்களுக்குச் சொல்லுவோமென்று பார்த்தால் அவர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளியிருக்கிறுர்; இதன் பொருள் எனக்குத் தெரியாதென்று சொல்லிவிடுவது அழகல்ல. உங்களுக்கு இத்போதே சொன்னேனுக வேணும்; சொல்லுகிறேன்; அதற்கொரு உபாயமுண்டு—என்று சொல்லிவிட்டு உடனே எம்பெருமானுருடைய ஸ்ரீ பாதுகைகளை யெடுத்துத் தம்முடிமீது வைத்துக் கொண்டு 'இப்போது ஸ்வாமிக்ருபையினுலே தெரிந்து கொள்ளப்பெற்றேன், சொல்லுகேன் கேண்மின்' என்று சொல்லத்தொடங்கி "அந்தணர்தமமுதத்தினைப் பாடவல்லார் சாயைபோல அணுக்கர்கள்" என்று அந்வயித்துப் பொருள் விளக்கியருளினர், தம்முடைய நிழல் தம்மைவிட்டு அகலாதவாறுபோல எம்பெருமானைப் பாடுமவர்கள் அப்பெருமானை விட்டு இறையும் அகலாது அவன்றனக்கே அத்தாணிச் சேவகராகப் பெருவர்—என்று பொருள் விளக்கினபடி. இங்ஙனம், சாயைபோல என்பதை அணுக்கர்களே என்பதோடு கொண்டு கூட்டாமல் உள்ளபடியே அந்வயித்து, சாயைபோலப் பாடுகையாவது குளிரப்பாடுகை என்று நிர்வஹிப்பதுமுண்டு என்றதாயிற்று. ....

ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலையில் பெரியாழ்வார் திருமொழிவியாக்யான ஸங்க்ரஹம் முற்றிற்று.

திருப்பாவை 1 மார்கழித்திங்கள்

(கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்) [மூவாயிரப்படி.] ஸ்ரீநந்த கோபர் முன்பு பசும்புல் சாவமிதியாதவராய்த்து. நம் சிறியாத்தானைப்போலே ஆந்ருசம்ஸ்யப்ரதாநராயாய்த்துப்போருவது; பிள்ளைகள் பிறந்தபின்பு அவர்கள் மேலுண்டான வாத்ஸல்யத்தாலே அவர்களுக்கு என்வருகின்றதோவென்றஞ்சி வேலைப் புகரெழக்கடைந்து பிடிக்கத் தொடங்கினுர்.

அப்பாட்டிலேயே, (இளஞ்சிங்கம்) சிங்கக்குருகு என்று பட்டரருளிச் செய்வர். (ஆருயிரப்படி.)

(மதிநிறைந்த)......பிஷுக்குக்கள் வாசல் ஆர்த்தர்கட்டணமாய்க் கிடக்குமா போலே ஸ்ரீநந்தகோபர்வாசல் க்ருஷ்ணனாலே புண்பட்ட பெண்கள் கட்டணமாய்க் கிடக்குமாய்க் கொள்ளீரென்று பட்டர்.

(நீராட) பட்டர் ஸ்ரீபாதத்தைக் கழுவித் தீர்த்தங்கொள்ளும் ஆண்டாள். (விவரணம்— ஆண்டாளென்றது கூரத்தாழ்வான் தேவியார்திருநாமம்; பட்டருடைய திருத்தாயாரென்க.)

எம்பெருமானாரும் ஸ்ரீ வைஷ்ணவர்களுமெழுந்தருளா நிற்கப் பெரியநம்பி தெண்டனிட்டுக்கிடந்தார்: நம்மை இங்ஙனே செய்தருளிற்றென்? என்று கேட்க, ஆளவந்தாரெழுந்தருளுகிறாரென்றிருந்தேன் என்றருளிச் செய்தார்.

(கூர்வேல் கொடுந்தொழிலன்) நமக்கு அவனை நோக்கித்தருமவனைச் சொல்லுங்கோளென்கிறார்கள். சிறியாத்தானைப்போலே பசும்புல் சாவமிதியாதவர் பிள்ளைபிறந்தவாறே வேலைப் புகரெழக் கடைய விட்டாராய்த்து.

(இளஞ்சிங்கம்) சிங்கக் குருகு என்று ஆழ்வான் வார்த்தை.

திருப்பாவை 2. வையத்துவாழ்வீர்காள்.

ஆருயிரப்படி. (வையத்துவாழ்வீர்காள்)......இப்படி வ்யதிரேகத்தில் முடியும்படியானவன் [தசரத சக்ரவர்த்தி] மோக்ஷம் பெறுதொழிவானென்? என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க; இவனுக்குள்ளது நரகமே; பெருமாளாந்ருசம்ஸ்யத்தாலே ஸ்வர்க்கஸ்தனானன் என்றருளிச் செய்தார்.

[குறிப்பு;—தசரத சக்ரவர்த்தியானவன் ஸத்யஸந்தனென்று பேர்படைத்தாலும், ஆபாஸமான ஸத்ய தர்மத்தைப் பற்றிநின்று. இராமபிரானோடு கூடிவாழ்தலாகிற பெரும் பேற்றையிழந்தனன். கைகேயிக்கு என்றைக்கோ கொடுத்திருந்த வரத்தை நிறைவேற்றுவிடில் பொய் சொன்ன பாவத்திற்காக நரகம் வந்துவிடுமே யென்று அஞ்சினான் தசரதன்; * யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா * என்று அந்த ஸ்ரீ ராமாயணத்திலே யுள்ள ஸித்தாந்தப்படி இராமபிரானை விட்டுப்பிரிவதே நரகம், அவனோடு கூடியிருப்பதே ஸ்வர்க்கம் என்று உண்டாகவேண்டிய பிரதிபத்தி அத்தயரதனுக்கு அடியோடு உண்டாகவில்லை. ததிபாண்டன் கண்ணனை மறைத்திட்டு வைத்து யசோதையிடம் உன் மகன் இங்கில்லை யென்று பொய் சொல்லி மோக்ஷம் பெற்று விட்டான்; தசரதன் ஸத்யமே நடத்தியும் ஸித்ததர்மத்தைக் கைவிட்டு ஆபாஸ தர்மரக்ஷணத்தில் ஊன்றினபடியாலே இழந்தான். முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தில் "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்கு உறுப்பு" என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம்.]

(ஆருயிரப்படி.) (செய்யாதன செய்யோம்) ஆழ்வான் 'எங்கள் பூர்வர்கள் தேவதாந்தர பஜனம் பண்ணுகையாலே' என்றானும்.

(முக்கியமான பிழைதிருத்தமொன்று. * பாற்கடலுள் பையத் துயின்ற * என்றவிடத்து மூவாயிரப்படியில் "ஜகத்ரக்ஷணசிந்தையிலே அவகாஹிதனாய்" எனறுள்ளது. மேலேயும் "ஆராலே ஆருக்கு என்ன நலிவு வருகிறதோ வென்று அதிலே அவகாஹிதனாய்க் கொண்டு சாய்ந்தபடி—என்றுள்ளது. இரண்டிடத்திலும் 'அவகாஹிதனாய்' என்றது அச்சுப்பிழை; அவஹிதனாய் என்பதே சுத்தபாடம். வடமொழியில் அவகாஹிதனாயென்ற சொல்வடிவம் கிடையாது.)

திருப்பாவை 3 ஓங்கியுலகளந்த.

(ஆருயிரப்படி. (ஓங்கி)......ஸ்ரீ வைகுண்டத்திலிருக்கும்போது ஸம்ஸாரிகளுடைய இழவுக்குத் திருவுள்ளம் நொந்திருக்கு மென்று பட்டரருளிச் செய்ய, சில

அத்தைக்கேட்டு "அவாப்தஸமஸ்தகாமனாய் நிரதிசயாநந்த யுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரனுக்கு ஓரிழவுண்டோ திருவுள்ளத்தில்?" என்ன, * வ்யஸநேஷு மநுஷ்யாணா மென்கிறது குணப்ரகரணமோ தோஷப்ரகரணமோ? என்றருளிச் செய்தார்.........

மாறனேரியிலே ராமாநுஜதாஸ னென்பாரொருத்தர் அவன் வருகிறபடியைக் கண்டு கடக்கப் போவென்பதே! நாலடி விலங்கிப்போதல், இல்லையாகில் ஒரு முழுக்கிட்டுக் கொள்ளுதல் செய்யவன்றோவடுப்பது என்ன; சண்டாளனே யாகிலும அவன் ஆத்தனான ஸமயத்தில் அல்லாதார் விலங்கிப்போவார்; த்விஜனாகில் அவன் விலங்குவான் என்று விதி விசேஷித்த அம்சம் அழிந்ததேயென்று அவர் சொல்ல, கெடுவிகாள்! விதிபூர்வகமாயோ க்ருபையிருப்பது! என்றருளிச் செய்தார்.

[விவரணம்:—மாறனேரி யென்கிற வூரிலே ஒரு ஸ்வாமி நடந்து சென்று கொண்டிருக்கையில் எதிரே ஒரு பஞ்சமன் வந்தான்; அவன் தீண்டாதானாகையாலே இந்த ஸ்வாமியானவர் அவனை விலகிப்போம்படி அதட்டுகிறார். அவன் இந்த ஸ்வாமியை விலகிப்போம்படி சொல்லுகிறான்; ஒருவரும் விலகாமல் இப்படியே விவாதம் வளர்ந்து கொண்டிருக்கையில், அங்கு அருகேயிருந்த வொரு ஸ்வாமியானவர் விவாதப்படுகிற ஸ்வாமியை நோக்கி 'அவனோடு எதற்காக இவ்வளவு விவாதம்? தேவரீரே விலகிப் போனாலென்ன? விலகிப்போக இடமில்லையாகில் கண்ணைமூடிக்கொண்டு போய்விட்டு ஒரு முழுக்கிட்டுக் கொள்ளலாகாதோ?' என்றாராம். அதற்கு அவர், 'தேவரீர் சொல்லுவது உண்மையே; எதிரே வருகிற பஞ்சமன் தலையில் விறகு சுமை முதலான பாரங்களைச் சுமந்து வந்தானாகில் அப்போது அந்தணன் விலகிப்போகக்கடவனென்றும், பஞ்சமன் தலைச்சுமையொன்றுமின்றிக்கே கை வீசி வருபவனாயிருந்தால் அந்தணனை விலகிப்போகச் சொல்லாமல் அவன்றானே விலகிப்போகக் கடவனென்றும் சாஸ்திரக் கட்டளையிருக்கிறதே; அப்படியிருக்க, இப்போது தலைச்சுமை யொன்று மின்றியே வருபவனான இந்த பஞ்சமன் தான் விலகிப்போகாமல் என்னை ஏதுக்கு விலகச் சொல்லுகிறான்? என்று பிணங்கினாராம் அதன்மேல் அந்த மத்யஸ்த ஸ்வாமி ஸாதித்த வார்த்தை;—ஸ்வாமிந்! தேவரீர் சொல்லுகிற சாஸ்த்ரார்த்தம் யதார்த்தமே; அதில் குறையொன்றுமில்லை; ப்ரக்ருதம் சாஸ்த்ரத்தைக் கொண்டு விவாதப்படுவானேன்? கருணையினாலே தேவரீர் விலகிப் போனால் இதை சாஸ்த்ரம் தடுக்குமோ? என்று.] இந்த ஐதிஹ்யத்திற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறுவாருளர்.

திருப்பாவை 4. ஆழிமழை. (அவதாரிகை)

(ஆறாயிரப்படி.) "த்ரவந்தி தைத்யாঃ ப்ரணமந்தி தேவதாঃ" என்கிறபடியே பகவத்ஸமாச்ரயணம் பண்ணுவார்க்கு தேவதைகள் வந்து குடநீர்வார்க்கக் கடவரிறே. "அவைதான் ஸ்ரீ வைஷ்ணவர்களை அநுவர்த்தியாதொழிவதென்? என்று கேளாய்" என்று ஆழ்வான்.

[விவரணம்;—ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டு அசுரர்கள் அஞ்சி நடுங்கியோடுவதாகவும் தேவர்கள் அர்க்யபாத்யாசமநீயங்கள் ஸமர்ப்பித்து வழிபடுவதாகவும் சாஸ்த்ரம் சொல்லிற்று; இங்கே கூரத்தாழ்வான் ஸாதிப்பது—அசுரர்கள் அஞ்சி யோடுவானேன்? தேவர்களைப்போலே இவர்களும் வந்து வணங்கி வழிபாடுகள் செய்து உஜ்ஜீவித்துப் போகலாகாதோ என்று.]

அப்பாட்டிலேயே "ஊழிமுதல்வனுருவம்போல்" என்றவிடத்து ஆறாயிரப்படியில் "நாச்சியார்விழிவிழிக்க வொண்ணாதாப்போலே" என்றுள்ளது. "நாச்சியார் விழிவிழிக்க வொண்ணாதென்றாப்போலே" என்றும் சில ஸ்ரீ கோசங்களில் பாடங்காண்கிறது. இரண்டு வகையான பாடத்திலும் ஓர் ஐதிஹ்யம் கர்ப்பிதம். அதாவது,

திருவரங்கம் பெரிய கோயிலில் பகற்பத்து முடிவுநாளிரவு ஸ்ரீ ரங்கநாதன் நாச்சியார் திருக்கோலம்பூண்டு ஸேவைஸாதித்தருள, பட்டர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்யும்போது பெருமாளை நோக்கி "தேவரீர் நாச்சியாருடைய வேஷத்தை ஏறிட்டுக்கொண்டதத்தனையொழிய அவள்போல் விழிவிழிக்க உம்மாலாகாதே" என்றாராம்.

திருப்பாவை. 5. மாயனைமன்னு. (ஆறாயிரப்படி)

(துறைவன்.) கம்ஸ பயத்துக்கு அஞ்சி ஒளிக்க வந்து சேர்ந்தாரைச் சொல்லுமா போலே சொன்னபடி பாரீர் என்று பட்டர்.

(குறிப்பு;—மேலே "கம்ஸபயத்துக்கு அஞ்சி" என்ற விடத்தில் 'கம்ஸனபாயத்துக்கு அஞ்சி' என்பது சுத்த பாடமென்பர் பெரியோர்.)

அவ்விடத்திலேயே, (தாமோதரனை.) பணைகளிலே தாவினவாறே உடை நழுவத் தழும்புகண்டு இடைச்சிகள் சிரித்தார்கள்; அத்தழும்பு தோன்றுமைக்கிறே நம்பெருமாள் கணையம்மேல்சாத்து சாத்துகிறது என்று ஜீயர்.

திருப்பாவை பா. 6. புள்ளும்சிலம்பினகாண்.

(மூவாயிரப்படி.) (புள்ளும்சிலம்பினகாண்) இவ்விடத்திலே பிள்ளைப்பிள்ளையாழ்வான் பகவத்ஸமாச்ரயணத்துக்கு அநுகூலமான காலத்தை ஸூசிப்பிக்கிற பக்ஷிநாதமல்லது இவ்வாத்மாவுக்கு உத்தேச்யமில்லை யென்று பணிக்கு மென்றருளிச்செய்வர்.

அப்பாட்டிலேயே (பிள்ளாய் என்ற விடத்து, மூவாயிரப்படியில்)—பட்டர், திருவாய்ப்பாடியிலுள்ளாரில் சிந்தயந்தியோபாதி க்ருஷ்ணஸம்ச்லேஷத்தில் புதியாரில்லை என்றருளிச் செய்வர்.

(குறிப்பு;—க்ருஷ்ணாவதாரத்தில் ராஸக்ரீடா ஸமயத்தில் திருக்குழலோசையைக் கேட்ட ஆயர்மாதர் ஸ்ரீ ப்ருந்தாவனத்தேறப்போகப் புறப்பட்டவளவிலே மாமியார் மாமனார்களது கட்டளையை மீறிப்போவார் சிலரும் அதற்கு அடங்கிநிற்பார் சிலருமாயிருக்க, ஓர் ஆய்ப்பெண் மாமனாரை மீறிப்போகமாட்டாமல் உள்ளடங்கி நின்று அந்த வேணுகான கோஷ்டியிலேயே தான் கலந்திருப்பதாகப் பாவனை முற்றிக் கண்ணபிரானைத் தியானம் பண்ணி அவனிடத்தே நெஞ்சு பதிந்திருக்கையாலே வந்த நிர்மலஸுகத்தாலும், உண்மையில் அவனைக் கிட்டப்பெறுமையாலுண்டான அளவற்ற துக்கத்தாலும் ஸகலபுண்ய பாபங்களும் கழியப்பெற்று அவனைப்பெறாது தரிக்கமாட்டாமல் மூச்சடங்கி அவளுடைய தேஹமும் தன்னடையே வீடுபெற்றது. இந்த ஆய்ப்பெண்ணுக்கு ஒரு பெயர் கூறப்படவில்லை; அவளைப்பற்றி ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்புக்க விடத்தில் "காசித்" என்று தொடங்கி "சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம், நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்று கூறப்பட்டிருந்ததால் 'சிந்தயந்தீ' என்ற குணநாமத்தால் இவளை நம் பூருவாசாரியர்கள் வியபதேசித்தருளினர். இவ்விடைப்பெண் "எங்கும் காவலுங் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே" என்றபடி காவல் கடந்து போகமாட்டாமே மாமியார் மாமனார்களைக் கண்டு திடுக்கிட்டு நிற்கும்படியாலே இவள் கிருஷ்ணனிடத்து ஈடுபாட்டில் புதியள் என்பர் பட்டர். பழகியிருந்தால் தேங்காதே போகத் துணிந்திருப்பாளன்றோ.)

திருப்பாவை 7 கீசுகீசு—அவதாரிகை

(ஆறாயிரப்படி.) ஆட்கொண்டவில்லி ஜீயர் எழுந்தருளா நிற்கச் செய்தே நஞ்சீயர் தெண்டனிட்டு நிற்க, 'பகவத் விஷயத்தில் ருசி நமக்கு மெய்யாகப் பிறந்ததில்லை காணும்' என்றருளிச்செய்ய, 'உம்மைப்போலே ஆசார்யவான்களுண்டோ? இங்ஙனே

யருளிச்செய்வதேன் ?' என்ன ; , பகவத் விஷயத்திலே மெய்யே ருசியுண்டென்றிருக்கை யாவது-பாகவதர்களைக் கண்டால் உகக்குமன்று காணும்' என்றருளிச் செய்தார்.

(குறிப்பு ;—ஆட்கொண்டவில்லி ஜீயரென்பவர் எம்பெருமானுர் திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில் ஒருவர் ; அவர் நஞ்சீயர் காலத்திலும் எழுந்தருளியிருந்தார். அவர் ஒரு நாள் நம்பெருமாளை மங்களசாஸனம் செய்துவிட்டுத் திரும்புகையில் நஞ்சீயர் அவரைத் தெண்டனிட்டு நல்வார்த்தை கேட்டருளுகையில, "எம்பெருமான் திறத்தில் நமக்கு மெய்யான ருசி உண்டாகவில்லையே" என்று அவர் குறையுடன் பணித்தாராம் ; அதைக் கேட்டு நஞ்சீயர், 'தேவரீரும் இப்படி ஸாதிக்கலாமோ? ஸாக்ஷாத் எம்பெருமானுர் திருவடிகளில் ஆச்ரயிக்கும் பாக்கியம் பெற்ற தேவரீருக்கு பகவத் விஷயத்தில் மெய்யான ருசி யில்லை என்னப்போமோ?' என்ருராம். அதற்கு அவர் அருளிய மறு மாற்றம்—'நாம் எம்பெருமான் ஸன்னிதிக்குப் போய்வருகிறோம் ; அப்பெருமானை ஸேவித்து வருகிறோம், அவனது வடிவழகிலீடுபட்டுக் கண்ணீர் பெருக்குகிறோம் என்பதெல்லாம் வாஸ்தவமே ; பாகவதர்களைக்கண்டால் நிலாத்தென்றல் சந்தனம் புஷ்பம் முதலான வற்றைக் கண்டாற்போல் உகந்திருக்கப் பெற்றுலன்றோ பகவான் திறத்தில் நமக்கு உண்மையான ருசி யுண்டாகப் பெற்றதாவது ; அது இல்லையே ! ஆதலால் சொன்னேன்' என்று. இதனுல் பாகவதர்கள் விஷயத்தில் ப்ரதிபத்தியுண்டாவது மிகவுமரிது—என்றதாயிற்று.]

திருப்பாவை. 8. கீழ்வானம் (ஆருயிரப்படி)

(கோதுகலமுடைய பாவாய்) "முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே என்று பட்டர்.

(இவ்வைதிஹ்யம் நாச்சியார் திருமொழியில் (13—1.) * பெண்ணின் வருத்தமறியாதபெருமான் * என்றவிடத்து வியாக்கியானத்திலு முள்ளது. "முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே யென்று பட்டரருளிச் செய்தாராக ப்ரஸித்தமிறே" என்றுள்ளது அங்கு. மோவாயெழுந்தார்—மீசை முளைத்தவர்கள் என்றபடி.)

திருப்பாவை 9. தூமணிமாடத்து (ஆருயிரப்படி)

(தூமணிமாடம்.) ஆழ்வான் "ஹிதாம்சத்துக்கு ஒரு வைஷ்ணவனுடைய க்ருஹயாத்ரையை யநுஸந்திக்கவமையும்" என்றாப்போலே (இவர்களும் இவளுடைய மாளிகையிலழகை அநுபவிக்கிறுர்கள்.)

அவ்விடத்திலேயே. (துயிலணைமேல் கண்வளரும்.) பட்டர்க்குச் சிலர் 'தொண்டனூர் நம்பி திருவடிச் சார்ந்தார்' என்று விண்ணப்பஞ் செய்ய, "அவர் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்து போந்தபடிக்கு, திருநாட்டுக்கு நடந்தாரென்று சொல்லவேண்டாவோ? என்றருளிச் செய்தார். நம்பியேறு திருவுடையார் தாஸரிடையாட்டமாகவும் நஞ்சீயர் இப்படியருளிச் செய்தார்.

திருப்பாவை 12 கனைத்திளங்கற்றெருமை. (மூவாயிரத்திலும் ஆருயிரத்திலும்.)

(இனித்தானெழுந்திராய்) எம்பெருமானுர் திருவவதரித்தாப் போலே காணும் இப பெண்பிள்ளையும்.

(விவரணம்) இங்கு "அனைத்தில்லத்தாருமறிந்து" என்றதில் நோக்காக "பகவத் ரஹஸ்யமாக அநுபவிக்குமித்தனை, புறம்பு இதுக்கு ஆளுண்டோவென்று யாகில் பெண்களையும் க்ருஷ்ணனையும் சேரவொட்டாத ஊரடைய ப்ரஸித்த

மாயிற்று என்றுமாம்" என்றருளிச்செய்து, உடனே "எம்பெருமானார் திருவவதரித்தாப்போலே காணுமிப்பெண் பிள்ளையும்" என்கிற ஸ்ரீஸூக்தியிருக்கையாலே ரஹஸ்யமெல்லாம் ஸதஸ்யமானபடிக்கு எம்பெருமானார் நினைவுக்கு வந்து இங்ஙனே யருளிச் செய்யப்பட்டது. மூவாயிரப்படியின் அரும்பதவுரையில் "இப்பெண்பிள்ளையென்றது எழுப்புகிற பெண்பிள்ளையென்றாய் ஆண்டாளென்றபடி. இவள் வாசலிலேயிருந்து அவள் ரஹஸ்யமாகவநுபவிக்க அத்தை வெளியிட்டாளென்று கருத்து" என்கிற விவரணம் காணப்படுகிறது. இதில் பொருத்தமிருப்பதாகத் தெரியவில்லை யென்று சில பெரியார் கூறுகின்றார்கள். இப்பெண்பிள்ளையென்றதற்கு 'இப்பாட்டிலெழுப்பப்படுகிற பெண்பிள்ளை' என்னும் பொருள்தான் ஸ்வரஸமானது. இப்பெண்பிள்ளைக்கும் எம்பெருமானார்க்கும் எந்த அம்சத்தில் ஸாம்யத்தை ஆசாரியர்கள் திருவுள்ளம்பற்றினார்களென்று ஆராயவேண்டும். அந்யாபதேசார்த்தத்தை விட்டு ஸ்வாபதேசார்த்தம் கொள்ளுமளவில் இப்பாட்டில் "கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்றுபால்சோர நனைத்தில்லஞ்சேறாக்கும் நற்செல்வன் தங்காய்" என்ற முதல் மூன்றடிகளினால் எம்பெருமானாருடைய இயல்பே வெட்டவெளிச்சமாகப் பேசப்பட்டிருக்கிறதென்னுமிடம் அறியப்பெறலாகும். ஸ்வாமியெம்பெருமானார் அநுவ்ருத்திப்ரஸந்நாசார்யர்களான மற்ற ஆசார்யர்களைப் போலல்லாமல் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராய் கன்றுகள்போன்ற சிஷ்யர்களுக்குத் திருவுள்ளமிரங்கி, உபஸத்திபண்ணிக் கேட்பார் இல்லாமலிருந்தாலுங்கூட தமது கடமையை நினைத்துப் பால்போன்ற சீரிய பொருளை வர்ஷித்தருளினவர் என்று ப்ரஸித்தியுள்ளது. அதை நினைப்பூட்டும்படியான ஸூக்திவிந்யாஸம் முதல் மூன்றடிகளில் அமைந்திருப்பது காண்க. முலைவழியே நின்று பால்சோர நனைத்து இல்லம் சேறாக்குமது எருமையே யொழிய, எழுப்பப்படுகிற பெண்பிள்ளையல்லவே; ஆகவே எம்பெருமானார்க்கும் இப்பெண்பிள்ளைக்கும் எப்படி ஸாம்யம் நிர்வஹிக்கமுடியும்? என்ற சங்கை வேண்டா. அந்த இல்லத்தில் நடைபெறும் விஷயத்தைச் சொல்லியிருப்பதானது இல்லத்தவளான பெண்பிள்ளையின் பெருமையைச் சொன்னவாறேயாகும்.

திருப்பாவை 14 உங்கள் புழைக்கடை. (ஆறாயிரப்படி.)

(செங்கல் பொடிக்கூறை) தாமஸப்ரக்ருதிகளைச் சொல்லுகிறது என்று எம்பார். தம: ப்ரசுரர் உணர்ந்தார்களென்று சொல்லியோ எழுப்புவதென்று ஸத்த்வநிஷ்டரான ஸந்யாஸிகளைச் சொல்லுகிறதென்று திருமலைநம்பி.

திருப்பாவை 15 எல்லேயிளங்கிளி. (மூவா. ஆறா.)

(சில்லென்றழையேன்மின்) திருவாய்மொழி பாடாநின்றால் செல்வரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாப்போலே.

("திருவாய்மொழிபாடுகை திருப்புன்னைக்குக்கீழே" என்பது அரும்பதவுரை.)

அங்கேயே (உனக்கென்ன வேறுடையை) நீ யொருவர்க்கும் விரோதியல்லை. நீ புக்குத் திருவடித் தொழு என்ன, ஆழ்வான் வார்த்தையை நினைப்பது.

(விவரணம்.) கூரத்தாழ்வான் சோழராஜஸபைக் கெழுந்தருளி அவ்வரசனுடைய் கொடுங்கோன்மையினால் திருக்கண்களையிழந்து மீண்டும் கோயிலேற வெழுந்தருளிப் பெரிய பெருமாளைத் திருவடிதொழுவதாக ஸந்நிதியினுள்புக்குப் பெரி[illegible] பலி பீடத்தருகே தெண்டன் ஸமர்ப்பித்துத் தம்முடைய அளவற்ற ஆர்த்தியை [illegible] கரித்து 'பெரிய நம்பியை அங்கீகரித்தாப்போலே அடியேனையும் அங்கீகரித்[illegible] காதோ?' என்று திருவுள்ளம் நொந்து விண்ணப்பஞ் செய்து, பின்பு உள்ளே [illegible]

ஸேவிப்பதாக எழுந்தருள, "ராமாநுஜருடைய ஸம்பந்தமுடையாரொருவரும் உள்ளே புகவொண்ணாது" என்று சோழன கட்டளையிட்டுவைத்தபடி அவனது ஸேவகர்கள் ஸன்னிதிவாசலிலே நின்று ஆழ்வானை உள்ளே புகவொட்டாமல் தகைய, அங்குள்ளாரில் சிலர் "இந்த ஐயங்கார் மற்றவர்களைப் போலல்லர், இவர் ஆத்மகுணங்கள் நிரம்பியவர்; இவரைத் தடை செய்யாது புகுரவிடலாம்" என்று சொல்ல; இவற்றைக் கேட்ட ஆழ்வான் திடுக்கிட்டு நடுங்கி நாலடிபின்வாங்கி 'ஐயோ! எல்லார்க்கு முண்டான ஆத்ம குணம ஆசார்ய ஸம்பந்தத்துக்கு ஹேதுவாயிருந்தது; அடியேனுக்குண்டான ஆத்மகுணம் ஆசார்ய ஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ளுகைக்கு ஹேதுவாய் விட்டதோ!' என வெறுத்துக்கொண்டு புறப்பட்டு 'என் பேற்றுக்கு எம்பெருமானார் திருவடி ஸம்பந்தமே அமையும்; அந்த ஸம்பந்தத்தை அஸ்த்கல்பமாக்கிப் பெருமாளை ஸேவிக்க வேண்டுவதில்லை' என்று உறுதிகொண்டு அன்றே திருமாலிருஞ்சோலைக்குப் புறப்பட்டருளினார் என்பது இதிஹாஸம். இங்கு, ராமாநுஜ ஸம்பந்திகளை ஸன்னிதிக்குள்ளே புகவிடக்கூடாதென்கிற அரசனது கட்டளையின்படி ஆழ்வானையும் விலக்கவேண்டியிருக்க, ராமாநுஜ ஸம்பந்தத்தை உபயோகமற்றதாக்கி இவருடைய ஆத்மகுண பூர்த்தியையே அவர்கள் மதித்தபடியால் அது ஆழ்வானுக்கு அஸஹ்யமாயிற்று. அது தோன்ற ஆழ்வானருளிச்செய்த வார்த்தை "உனக்கென்ன வேறுடைமை" என்றவிடத்திற்கு மிகவும் பொருத்தமானது.

திருப்பாவை 16 நாயகனாய்நின்ற. (ஆறாயிரப்படி)

(அவதாரிகையில்—) நஞ்சீயர், பிள்ளைக்கு, "ரஸவாதம் கைப்பட்டவன் இருந்தவிடமெல்லாம் பொன்னாமாப்போலே ப்ரமேயம் கைப்பட்டவனுக்குச் சொல்லிற்றெல்லாம் வார்த்தையாம்" என்றார்.

(நாயகனாய் நின்ற)... ஆளவந்தார் எம்பெருமானை ஸ்தோத்திரம் பண்ணவென்று புக்கு ஆசார்ய ஸ்தோத்திரத்திலே யிழிந்தார்; அதுக்கடி, ஒருவன் ஒரு ரத்னத்தைக் கொடுத்தால் அதின் விலையை அறியவறியக் கொடுத்தவன் பக்கலிலே விருப்பம் பிறக்குமாபோலே, சாஸ்த்ரங்களெங்கும் அப்யஸித்துப் பார்க்குமிடத்து உபாயமாகத் தோற்றுகிற கர்மஜ்ஞாந பக்திகள் பேற்றுக்கு ஸாதநமாகமாட்டாது, பகவத் ஸம்பந்திகளை முன்னிட்டுக் கொண்டு அவனையே உபாயமாகப் பற்றுமது பேற்றுக்குடலென்று ஸ்வப்ரபந்தத்திலே முதலிலும் முடிவிலும் பரமாசார்யரான பெரிய முதலியாரைப் பற்றினார். * த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே * என்று தாம் அவன் திருவடிகளிலே பண்ணின ப்ரபத்தியையும் கீழிலவற்றோடே காற்கடைக்கொண்டு * நாதமுநிம் விலோக்ய * என்று பெரிய முதலியாரை முன்னிட்டார்.

.........பட்டர் நஞ்சீயரை "பெரிய பெருமாள் தஞ்சமென்றிக்குமவரைத் தஞ்சமென்றிரும்" என்றருளிச் செய்தார். ... ... (*)

திருப்பாவை 18 உந்து மதகளிற்றன். (மூவா. ஆறா.)

(வியாக்கியான முடிவில்) எம்பெருமானார் விசேஷித்து உகந்திருக்கும்பாட்டு இப்பாட்டு.

(விவரணம்) எம்பெருமானார்க்குத் திருப்பாவை ஜீயரென்று ஒரு திருநாமமுண்டு. திருமடைப்பள்ளிக் கைங்கரியத்துக்குக் கிடாம்பியாச்சான் அமருவதற்கு முன்னே ஸ்வாமி மாதுகரத்திற்கெழுந்தருளுகிறபோது திருப்பாவை யநுஸந்தானத்தோடு எழுந்தருள்வது வழக்கம். ஒருநாள் பெரியநம்பி திருமாளிகைக்கு மாதுகரத்திற்கெழுந்தருள, அப்போது திருக்காப்பு சேர்த்திருக்கையாலே ஸ்வாமியின் மந்தஸ்வரமான அநுஸந்தானத்தைக் கேட்டு அத்துழாய் உள்ளிருந்து வந்து திருக்காப்பு நீக்கி நிற்க, ஸ்வாமி அவளைக் கண்டவாறே தெண்டனிட்டு நிற்க, அவள் திருத்தகப்பனாரான பெரிய

நம்பி பக்கலிற்சென்று 'ஜயா! கதவைத் திறந்து சென்றேன், என்னைக் கண்டவுடனே ஜீயர் தெண்டனிட்டார்' என்று சொல்ல; நம்பி ஸர்வஜ்ஞராகையாலே "உந்துமத களிற்றன் அநுஸந்தானமாயிருக்கும்" என்றருளிச்செய்ய அதுகேட்ட அத்துழாய் 'ஆவதென்?' என்ன, *செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்* என்று அநுஸந்தியாநிற்க நீ திறந்தவாறே அப்படியே உன்னைக்கண்டு 'நப்பின்னையை ஸேவிக்கப் பெற்றோம்' என்று கொண்டாராகவேணும்—என்று நம்பி அருளிச்செய்தார்; ஆகையால் இப்பாட்டு எம்பெருமானருகந்ததென்று நம் முதலிகள் ஆதரிப்பரென்க. .... (*)

திருப்பாவை 20 முப்பத்துமூவர். (ஆருயிரப்படி)

(திருவே) உதாரவாக்குக்களாகிறார்—திருமங்கையாழ்வாரும் ஆளவந்தாரும் ஆழ்வானும் பட்டரும். ... ... *

திருப்பாவை 21 ஏற்றகலங்கள். (ஆருயிரப்படி.)

(வள்ளல் பெரும்பசுக்கள்)*உதார :—ஸந்தர்சயந்* என்று ஆளவந்தார்.

திருப்பாவை 22. அங்கண்மாஞாலத்து. (ஆருயிரப்படி.)

(அங்கண்மா ஞாலத்தரசர்)...........வேதாந்தங்களிலே ப்ரஹ்மாதிகளுங்கூட ஏழு ஜன்மம் ஜனித்து அரிய ஸாதநாநுஷ்டானங்களைப்பண்ணி பின்பு பகவத்ப்ராப்திரூப புருஷார்த்தம் பெற்றார்களாகச் சொல்லாநின்றது. இவ்வருகே எத்தனையேனும் கீழாயிருப்பார் சிலர் சரீராவஸாநகாலத்திலே மோக்ஷம் கிடைக்கு மென்று பொதிசோறு கட்டிக்கொண்டிரா நின்றார்கள்; இவையிரண்டும் சேரவிழுந்தபடியெங்ஙனே? என்று பட்டரைக் கேட்க; ஒரு குறையில்லையென்றருளிச்செய்தார்:—"அன்வ தன் விபூதியளவுஞ் செல்லப் பச்சையிட்டுப் பெறக்கடவேனென்று கோலக்கடவன். யதோபாஸநம் பல மாகையாலே தத்க்ரதுந்யாயத்தாலே அப்படியேயாயிருக்கும் அவனுக்கு; இவன் தன் பக்கல் ஒன்றுமில்லாமையை அநுஸந்தித்து ப்ரதமபரிஸ்பந்தமே பிடித்து நீயேயெனக்குக் கடவையாகவேணுமென்று காலிலே விழும்; அவனும் அப்படியே தன் தலையிலேயேறிட்டுக்கொண்டு இவன்கை பார்த்திருக்க வேண்டாதபடி தலைக்கட்டிக்கொடுக்கும். அவனுக்குத் தான் கோலின பரப்படங்கலும் விடவேணும்; இவனுக்கு இவ்வளவேயிறே விடவேண்டுவது. அவன் அநுஷ்டிக்கக்கடவவையெல்லாம் அநுஷ்டித்துப்பின்பு பலந்தரப் பார்த்திருக்கும்; ஈச்வரனையேயிறே இவன் முதலிலே பற்றிற்று."

அங்கேயே மேலே,—(எங்கள்மேல்).........ஸிம்ஹம் ஆனையோடே பொராநின்றாலும் குட்டிக்கு முலைகொடுக்குமாபோலேயென்று பட்டர். *குழவியிடைக்காலிட்டெதிர்ந்து பொரும்*

திருப்பாவை 23 மாரிமலை முழஞ்சில் (மூவாயிரம் ஆருயிரம்)

(யாம் வந்த காரிய மாராய்ந்தருள்).........அழகர் கிடாம்பியாச்சானை அருளப்பாடிட்டு ஒன்று சொல்லிக்காணாய் என்ன, *அபராத ஸஹஸ்ரபாஜநம்* என்று தொடங்கி அகதிம் என்ன, நம்மிராமாநுசனையுடையையாயிருந்து வைத்து அகதிம் என்னப்பெறாய்' என்றருளிச் செய்தார்.

ஆருயிரப்படியில் இவ்வைதிஹ்யம் அவதாரிகையின் முடிவிலே உள்ளது.

திருப்பாவை 24 அன்றிவ்வுலகம் (மூவாயிரப்படி)

(நின்கையில் வேல்போற்றி) (*வடிவார் சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டென்று ஆயுதங்களுக்கும் மங்களாசாஸனம் பண்ணிஞரிறே தமப்பனர்.) "கதே ஜலே ஸேதுபந்தம் தமப்பனருக்கும் மகளுக்கும்பணி" என்று ஜீயர் அருளிச் செய்வர்.

திருப்பாவை 25 ஒருத்திமகனய். (ஆருயிரப்படி)

(ஒருத்திமகனய்)........அவளுக்கு முலே சுரவாநின்றதாகில் இவன் அழுது முலேயுண்ணு நின்ருஞகில் உமக்குச் சேதமென்? என்று பட்டர்.

திருப்பாவை 27 கூடாரைவெல்லும் (மூவாயிரப்படி.)

(யாம் பெறு சம்மானம்) * பதிஸம்மாநிதா ஸீதா என்று—பெருமாள் தோளில் மாலேயை வாங்கியிட்டார் என்று ஆழ்வான் பணிக்கும். பட்டரும் பணிக்கும்.

(விவரணம்.) பட்டரும் பணிக்குமென்று காண்பதில் அச்சுப்பிழை யிருக்கும் போல் தோன்றுகிற தென்று சில பெரியார் கூறுகின்றனர். *பதிஸம்மாநிதா ஸீதா* என்ற விடத்திற்கு ஆழ்வான் நிர்வாஹம் மேலே காட்டப்பட்டது. பட்டருடைய நிர்வாஹம் அதனில் வேருக மற்ருேரிடத்தில் காண்கிறது—காலேப்பிடிக்குமென்று.

அங்கேயே (முழங்கைவழிவார) நம்பிதிருவழுதி வளநாடுதாஸர் நெய்படாதோ வென்ன, க்ருஷ்ண ஸந்நிதியாலே த்ருப்தைகளாயிருக்கிறவர்களுக்குச் சோறு வாயில் தொங்கிலன்ருே நெய் வாயில் தொங்குவது என்று பட்டரருளிச் செய்தார்.

[ஆருயிரப்படி] (யாம் பெறு சம்மானம்)......வெளித்திருமுற்றத்திலே, ப்ரஸாதம் வர அவ்வளவிலே "யாம் பெறு சம்மானம் வந்தது" என்ருர் பட்டர்.

திருப்பாவை 30 வங்கக்கடல் (மூவா. ஆரு.)

(அவதாரிகையில்) கன்றிழந்த தலேநாகு தோற்கன்றுக்கும் இரங்குமாபோலே, இப்பாசுரம் கொண்டுபுக நமக்கும் பலிக்குமென்று பட்டர் அருளிச் செய்வர்.

(மூவா=மாதவனேக் கேசவனே) * அலேகடல் கடைந்தவனுள் கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே, விண்ணவரமுதுண அமுதில்வரும் பெண்ணமுதுண்ட வெம்பெருமானே * என்கிறபடியே தான் ஸாக்ஷாதம்ருதத்தையுண்டு ப்ரஹ்மாதிகளுக்குக் கோதைக்கொடுத்தான் என்று பட்டரருளிச் செய்வர்.

(மூவா—எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்) விடிவோறே யெழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல், மாட்டிற்றிலஞகில் * சிற்றஞ்சிறுகாலே யென்கிற பாட்டை யநுஸந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலஞகில் நாமிருந்த விருப்பை நினைப்பது —என்று பட்டர் அருளிச் செய்வர். ... ... *

ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலேயில்

திருப்பாவை வியாக்கியான ஸங்க்ரஹம் முற்றிற்று.

நாச்சியார் திருமொழி.

மூன்றாந் திருமொழி—கோழியழைப்பதன்—9. கஞ்சன்வலைவைத்த.

(காரிருளெல்லில் பிழைத்து)....பிள்ளையுறங்காவில்லிதாஸர்—இவன் தான் பருவம் நிரம்பாமையாலே தன்னை நோக்கிக்கொள்ள மாட்டிற்றிலன்; புறம்பு தானே பரிந்து நோக்குகைக்கு ஒருத்தரில்லை. கம்ஸாதிகள் தப்பாமல் அகப்படுத்தக் கோலி நின்றார்கள்; அவ்வளவில் உதவித்தந்தது இருள், அத்தைச் சரணம்புகுமத்தனையிறே—என்று பணிப்பராம்.

நான்காந் திருமொழி—முதற்பாட்டு. தெள்ளியார் பலர்.

(மணாளர் பள்ளி கொள்ளுமிடத்து) பள்ளிகொள்ளுமிடமாகிறது கோயில் என்று பட்டரருளிச் செய்ய நான் கேட்டேன் என்று பிள்ளையழகியமணவாளரரையர் பணிப்பர்.

தெள்ளியார் பலர் 9. கொண்டகோலக்குறள்.

(அண்டமும் நிலனுமடியொன்றினால்) (த்ரீணி பதா விசக்ரமே) என்றும்,* மூன்றடி நிமிர்த்து என்றும் உண்டாயிராநின்றது. இதிருக்கிறபடியென்?" என்று பட்டரைக் கேட்க; "परो मात्रया तनुवा वृधान । न ते महित्वमन्वश्नुवन्ति । उभेते विद्म रजसी पृथिव्या विष्णोदेवत्वम् । परमस्यवित्से "என்று, வேத புருஷன்தானே இரண்டடியாலளந்தவிடம் எல்லாருமறியும், நீ மூன்றடியாலளந்தவிடம் உனக்கே தெரியுமத்தனையென்று வேதபுருஷனும் காணாதே விட்டான்; அவன் அளந்தமையுண்டு; அவனுக்கே தெரியுமத்தனை என்றருளிச் செய்தாரென்று ஜீயரருளிச் செய்வர்.

தெள்ளியார் 11. ஊடல் கூடல்.

(நீடுநின்ற நிறைபுகழாய்ச்சியர்)...நிறை புகழாச்சியர் என்கிறதுக்கு எம்பார், இவர்களுக்கு நிறைபுகழாவது க்ருஷ்ணனை இன்னாள் நாலுபட்டினி கொண்டாள், இன்னாள் பத்துப்பட்டினி கொண்டாள் என்னும் புகழ்காணும் என்றருளிச் செய்வர்.

(விவரணம்.) * கூர்மழைபோல் பனிக்கூதலெய்திக் கூசிநடுங்கி யமுனையாற்றில் வார்மணற்குன்றில் புலரநின்றேன் வாசுதேவாவுன் வரவு பார்த்தே * என்கிறபடியே கண்ணபிரானுடைய வரவை எதிர்பார்த்திருப்பர்கள் பல மாதர். இவன் இப்படி பல மாதர்கள் தன்னை யெதிர்பார்த்திருக்கும்படி செய்துவிட்டுத் தன் மனத்துக்கினியாளான வொருத்தியோடே கலந்திருந்து போதுபோக்குவன்: அப்போது எதிர்பார்த்திருந்த மற்றை மாதர்கள்* இன்னமென்கையகத் தீங்கொருநாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே* என்றபடி இனி அந்தக் கண்ணபிரான் இங்கேற வருவானாகில் முகங்கொடுத்து ஒரு வார்த்தையுஞ் சொல்லக் கடவோமல்லோமென்று ஸங்கல்பஞ் செய்துகொண்டு அளவற்ற ரோஷத்துடனிருப்பர்க்ள். பிறகு தனக்கு ஒழிந்தபோது ஒரு நாள் கண்ணபிரான் அளவிறந்த அன்பு பூண்டவன்போல ஆடிப்பாடிக்கொண்டு அவர்கள் முன்னே வந்து நிற்பன். அப்போது அவர்கள் தாங்கள் முன்பு செய்துகொண்ட ஸங்கல்பத்தின் படியே முகங்கொடாமலேயிருப்பர்கள். அப்போது இவன் கண்ணீர் விட்டழுது காலில் கும்பிடுவதுமாய் ஊணுமுறக்கமுமில்லாமல் பலநாட்களளவும் அவர்களது ... டைவிட்டுப் பெயராதே இடை கழித்திண்ணையிலே கிடந்து படுவன். இப்படி ... நாள் பட்டினிகிடந்த பிறகு ஒருத்திமனமிரங்கி முகங்கொடுப்பள். மற்றொருத்தி ... வளவிலும் மறம் மாறாதே இவன் எட்டு நாள் பட்டினி கிடந்த பின்பு முகங்கொடுப்பள்... இப்படி பலபல நாள் பட்டினிகிடந்தாகிலும் அவ்வாய்ச்சிகள் பக்கலிலே முகம்பெற நினைப்பது அவர்களிடத்துள்ள தேஹகுணம் ஆத்மகுணம் முதலியவைகளான வைலக்ஷண்யத்தைப்பற்றியாம். இதனால் அவர்களது புகழ் வீறுபெறுமாய்

நாச்சியார் திருமொழி—மன்னுபெரும்புகழ்—5. மென்னடையன்னம்.

(வில்லிபுத்தூருறைவான்தன் இத்யாதி.) வைகுந்தனென்பதோர் தோணிபெரு துழல்கின்றேனென்கை ப்ராப்தம்—அதிதூரஸ்தமாகையாலே. தனக்காக வந்து நிற்கிற விடத்திலே காணப்பெறாதே நோவுபட்டுக் கண்ணுறங்காதேயிருந்தாளென்றால் இது சேரும்படியெங்ஙனே யென்று நான் ஜீயரைக் கேட்டேன் ; உள்ளுப்புக்கால் குறியழியாமே நம்மைப்போலே போரவல்லவளல்லள், ஸ்ரீ பரதாழ்வானைப்போலே மோஹிப்பாளொருத்தி யாய்த்து ; உள்ளே கொடுபுகில், அந்த சீலகுணத்தைக் கண்டவாறே இவள் மோஹித்துக் கிடக்கும் ; பின்னை இவளை யிழக்கவொண்ணாதென்று கொண்டுபுக்கார் களில்லைபோலே காணும் என்றருளிச் செய்தாரென்று அருளிச்செய்வர்.

(விவரணம்.) இது, நஞ்சீயரிடம் கேட்டதாக நம்பிள்ளையருளிச் செய்வரென்றபடி. இங்குக் கேள்வியென்ன? ஸமாதானமென்ன? என்னில்; கீழ்ப்பாட்டில் * வைகுந்தனென்பதோர் தோணி பெருதுழல்கின்றேனென்றது பொருந்தும் ; ஸ்ரீவைகுண்டம் ஆண்டாளுக்கு எட்டாத நிலமாகையாலே அவ்வைகுந்தனைப் பெறுவதற்கு இயலாமல் வருந்துவதாகக் கூறினது தகும். இப்பாட்டிலோவென்றால் * வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி காண்ப தோராசையினால் என்கிறாள் ; அவ்வூரிலேயே பிறந்து வளருமவளான இவளுக்கு அப்பெருமானுடைய பொன்னடியைக் காண்பதில் என்ன அருமை? காதமா இருகாதமா? நாலடியளவிலேயிருக்கின்ற வடபெருங்கோயிலுடையானது ஸன்னிதிக்குள்ளே நினைத்தபோதெல்லாம் போய்ப்புகுந்து கண்டு வரலாமன்றோ ; ஆயிருக்க, ஸ்ரீவில்லிபுத்தூரெம்பெருமானுடைய திருவடிகளை ஸேவிக்கப் பெறாமல் என் கண்கள் விடாய்த்துப் போயினவென்று இவள் சொல்லுவது எப்படி பொருந்துமென்று நஞ்சீயர் ஸந்நிதியிலே நம்பிள்ளையின் வினா. அதற்கு ஜீயருடைய விடையாவது—' நீர் கேட்டது அழகியதே ; ஆண்டாள் ஸ்ரீ வில்லிபுத்தூரிலேயே பிறந்து வளருமவளாயினும் வடபெருங்கோயிலுடையானது ஸன்னிதியிலே சென்று புகுவது அவளுக்கு எளிதாகக் கைகூடுமதன்று ; நாமெல்லாம் கோவிலுக்குள்ளே போய்வந்தால் சித்தவிகாரமென்பது சிறிதுமில்லாமல், கல்போலவே போய்க் கல்போலவே திரும்பி வருகிறோம் ; ஆண்டாளுடைய ப்ரக்ருதி அப்படிப்பட்டதல்ல காணும் ; உள்ளே புகுந்தவாறே அப்பெருமானுடைய சீலகுணத்தை அநுஸந்தித்து அதிலே ஆழங்காற்பட்டுப் பரதாழ்வானைப்போலே மோஹிப்பவளாயிற்று. இப்படிப்பட்ட ப்ரக்ருதியைத் தெரிந்துகொண்டிருக்கும் இவளுடைய உறவினர் இவளைக் கோவில் வழிநடவொட்டார்கள். *குழையும் வாண்முகத்தேழையைத் துலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு இழைகொள்சோதிச் செந்தாமரைக் கட்பிரானிருந்தமை காட்டினீர்* (திருவாய்மொழி 6—5—5.) என்ற பாசுரத்தை இங்கே நினைப்பது. இவளைக் கோவிலுக்கு அழைத்துக்கொண்டுபோய்ப் பெருமாளை ஸேவிக்கச் செய்து அதனால் சித்தவிகாரமுமடையும்படி செய்து ' அநியாயமாகக் குழந்தையைக் கோவிலுக்கு அழைத்துக் கொண்டுபோய் வலையிலகப்படுத்தி இழந்தீர்களே ' என்று நாலு பேர் வசை கூறும்படி யாவதிற்காட்டிலும் இவளைக் கோவில் வழி நோக்கவொட்டாமற் செய்வதே நன்றென்று நினைத்துத் தாய்தந்தையர் இவளை அகத்தினுள்ளேயே அடக்கிவைத்திருப்பர் களாகையாலே * வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி காண்பதோராசையினாலென் பொருகயல்கண்ணிணை துஞ்சா என்று கூறினது பொருத்தமுடைத்தே — என்று.

நாச்சியார் திருமொழி—மன்னுபெரும்புகழ்—6 எத்திசையும்.

(என்தத்துவனை) ராவணன் மாயாசிரஸ்ஸைக் காட்டினபோது ' ஸார்வபௌமனாயிருப்பானொருவன் கைப்பிடிக்கக்கடவன் என்றாப்போலே ஜ்யோதிர்வித்துக்கள் சொன்னவையும் பலிக்கக் கண்டிலேன் ' என்று இங்ஙனே சிலவற்றைச் சொல்லி இக்காலத்தில் ஸ்த்ரீகள் பொய்யே கண்ணநீரை விட்டிருக்குமாபோலே விட்டிருந்து இவ

ளும் தரித்திருக்கைக்கு அடியென்? என்று நான் ஜீயரைக் கேட்க; ஜ்ஞாநமன்று இவள் ஜீவநத்துக்கு ஹேது; பெருமாள் ஸத்தையாய்த்து; அவர் உளராகையாலே இருந்தாள் காணும் என்றருளிச்செய்தார்.

(விவரணம்.) இது, பெரியவாச்சான்பிள்ளைக்கும் நஞ்சீயருக்கும் நடந்த ஸம்வாத மென்று தோன்றுகிறது. நம்பிள்ளைக்கும் நஞ்சீயர்க்கும் நடந்த ஸம்வாத மென்று கொண்டாலும் குறையில்லை. இங்குக் கேள்வி யென்ன? விடையென்ன? என்னில்; மாயாவியான ராவணன் இராமன் தலையறுப்புண்டு தொலைந்தானென்று தோற்றும்படி ஒரு மாயா சிரஸ்ஸைக் கொண்டுவந்து பிராட்டிக்குக் காட்டி 'இதோபார் ஸீதே! உன் கணவன் தலையறுப்புண் டொழிந்தான்' என்று பொய்சொன்னபோது இக்காலத்துப் பெண்டிர் தமது பர்த்தாக்களின் மரணத்திலே சற்றுக் கண்ணநீரைப் பெருகவிட்டுக்கிடப்பதுபோல் பிராட்டியும் துக்கப்படுவதுபோல் சிறிது துக்கப்பட்டு உயிர்தரித்திருந்தாளே யொழிய, பிராணன் படுக்கென்றுபட்டுப் போகப் பெற்றிலளே; மெய்யான அன்பு இருக்குமாகில் அந்த ஸமயத்திலுங்கூடவா உயிர்தொலையாதிருக்கும்? பிராணநாதன் உயிரொழிந்தானென்று மாயாசிரஸ்ஸைக் கண்டு மெய்யாக நம்பித்தானே துயருற்றாள்; நம்பவில்லை என்றால் துயருற அவசியமில்லை; துயருறுகையாலே நம்பினாளென்று நிச்சயிக்கவேண்டிற்று. அப்போது உயிர்தரித்திருந்து அழுதாளென்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லிற்றே; அவள் இராமபிரானிடத்து வைத்திருந்த பிரணயத்திற்கும் இப்படியழுவதற்கும் சேர்த்தியில்லைபோலிருக்கிறதே யென்று வினா; இதற்கு விடையாவது:— நாயகன் உயிரோடிருக்கிறானென்று நினைத்துக்கொள்வதும் உயிரிழந்துவிட்டானென்று நினைத்துக்கொள்வதும் உபயோகமற்றது. மானிடர்க்கு மருள் ஸம்பாவிதமாகையாலே உள்ளதை இல்லாததாகவும் இல்லாததை உள்ளதாகவும் மருளக்கூடும். அந்த மருளினால் விபரீதம் எதுவும் நேர்ந்திடாது. உண்மையில் நாயகன் ஜீவித்திருந்தானாகில் அந்த ஸத்தையே காரணமாக நாயகியின் ஸத்தையும் குறையற்றதாகும். நாதனது ஸத்தையில் குறையில்லாதிருக்க, உண்மைக்கு மாறாக ஒருவர் ஸத்தையில்லையாகப் பொய் சொன்னால், அதனை நம்பநேர்ந்தாலும் துக்கமுண்டாகு மத்தனையல்லது ப்ராணலோபமுண்டாகாது. உத்தமநாயக நாயகிகளின் உயிர்களானவை *ஆக்க்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா* என்றபடி பரஸ்பரம் தம் தம் ஸத்தையைத் தெரிவித்துக்கொள்ளும். ப்ரக்ருதத்தில், ராவணன் மாயாசிரஸ்ஸை வஞ்சனையாகக் காட்டினாலும், பிராட்டி நம்பினாலும், உண்மையில் பெருமாளுடைய ஸத்தைக்குக் குறையில்லாமையாலே பிராட்டியும் ஸத்தைகுலையாதிருந்தாள்—என்று. இவ்வைதிஹ்யத்திற்கு இங்கு ப்ரஸக்தி என்னென்னில்; மூலத்தில் 'என்தத்துவனை' என்றுள்ளதற்கு இது பொருத்தமான ஸம்வாதமாகும். குயிலானது ஆண்டாளை நோக்கி 'இருடீகேசனை இங்கு வருமாறு கூவச் சொல்லுகிறாய் நீ; அவன் உன்னோடு சேர்ந்திருந்த காலத்தில் 'பிரியேன், பிரியில் பிழையேன்' என்று சொன்னதை நான் கேட்டிருக்கிறேன்; உனக்கும் அது ஞாபகமிருக்குமே; ஆகவே உன்னைப்பிரிந்துபோய் இன்னும் வந்து சேராதிருக்கிற அவன் பிழைத்திருப்பனென்று எனக்குத் தோன்றவில்லையே; அன்னவனை நான் கூவிப் பயனென்ன?' என்றதாகக் கொண்டு, அதற்கு ஆண்டாள் 'குயிலே! அங்ஙனன்றுகாண்; நான் ஸத்தை கெடாமல் இருக்கின்றமையால் காதலனும் அப்படியே ஸத்தை கெடாதிருப்பனென்று நினை; அவனது ஸத்தைக்கு ஹாநி விளைந்திருக்குமாகில் எனது ஸத்தையும் குலைந்திருக்குமன்றோ; அவன் என்னுடைய தத்துவன்காண்; ஆதலால் அவனுடைய ஸத்தை நிச்சயித்துக்கொள் என்கிறாளென்க. ஆகவே என்தத்துவன் என்றது—என்னு ஸத்தைக்கு ஹேதுவானவன் என்றபடி.

அதிலேயே மேலே (தலையல்லால் கைம்மாறிலேனே) பெற்றி, கிழக்குக்[illegible] விடத்திலே இதுக்குப் பொருளென்? என்று என்னை சிலர் கேட்டார்கள்; வரும்படி கூவவல்லையாகில் உனக்கு ப்ரத்யுபகாரமாக என் தலையைத் தருமத் என்று சொல்லுகிறாள் என்று சொன்னேன்; இவ்வளவாகமாட்டாது

பொருள் என்றிருந்தேன் ; அவ்விடத்துக்கு ஜீயரருளிச் செய்யும்படி என் ! என்று கேட்டார் ; நீ பண்ணின வுபகாரத்துக்கு இத்தலையால் செய்வதொன்றுண்டோ வென்று என் தலையை உனக்காக்கிக் காலமெல்லாம் உன் காலிலே வணங்கி வர்த்திக்குமத்தனை யென்கிருள் என்றருளிச் செய்வர்—என்றேன். போரக்கொண்டாடியருளி 'நான் பதினேருரு திருவாய்மொழிகேட்டேன் ; திருமொழி கேட்கப்பெற்றிலேன் ; போன விடங்களிலே என்னைச் சிலர் கேட்டால் அருளிச்செய்யுமதுவே எனக்குத் தோற்றி நானும் சொல்லும்படி ப்ரஸாதிக்கவேணும் என்று வேண்டிக்கொண்டேன் ; அவரும் அப்படி ப்ரஸாதித்தருளினர் ; ஒரு வரலாபத்தாலே இவை அறியப்போகாது, ச்ரவணங்கொண்டறியவேணும் என்றருளிச் செய்தார்—என்றருளிச் செய்வர்.

நாச்சியார் திருமொழி. 6—5. கதிரொளி தீபம்.

(மதுரையார் மன்னன்) ஒருவன் ஒரு பிள்ளையையுகந்தருளப்பண்ணி 'இவர்க்கு என்ன திருநாமம் சாத்துவோம்' என்றிருக்கச் செய்தே, அதுவே இதுவே என்றழையாதே என்னை மதுரை மன்னனென்றழை என்று ஸ்வப்நத்திலேயருளிச் செய்தாராம்.

அப்பாட்டிலேயே, (எங்குமதிரப்புகுத.) மஹாபலியஜ்ஞவாடத்திலே நடந்த போது பூமி நெளிந்ததென்று ஒரு க்ரந்தத்தில் கிடந்ததாய் 'இதுக்குப் பொருளென் ?' என்று கேட்டவாறே, 'ஸர்வேச்வரனன்றே சொல்லவேணுமோ ?' என்றூர்களாய், இத்தை ஜீயர் கேட்டருளி பட்டரைக் கேட்க, 'இரப்பில் பதற்றத்தால் அடியிட்டபடி காணும்' என்றருளிச் செய்தாராம்.

நாச்சியார் திருமொழி 7—2. கடலிற்பிறந்து.

(கடலில் பிறந்தித்யாதி.) நஞ்சீயர் ஸம்ந்யஸித்தருளின காலத்திலே அனந்தாழ்வான் கண்டு, முன்புத்தை ஐச்வர்யமறியுமவனுகையாலே 'ஒரு பூவைச் சூடி வெற்றிலையைத் தின்று சந்தனத்தைப் பூசிப் போராநிற்கச் செய்தே எம்பெருமானே ரக்ஷகனென்றிருந்தால் பரமபதத்தில் நின்றும் இழியத்தள்ளுவர்களோ ? இங்ஙனே செய்ததாகாது' என்று போர வெறுத்தவாறே, கூட நின்றவர்களும் 'இங்ஙன் செய்வதே !' என்று வெறுத்தார்களாய் 'இவர்தாம் இனிச் செய்வதென் ?' என்று விட்டு, 'திருமந்த்ரத்திலே பிற' என்று முக்கால் சொல்லி 'திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டனும்படியாய்த் தலைக்கட்டுவது உன் காரியம்' என்று ப்ரஸாதித்தான். திருமந்த்ரத்தில் சொல்லுகிறபடியே ஸ்வரூப ஜ்ஞானமுண்டாய் த்வயத்தில் சொல்லுகிறபடியே உபாய பரிக்ரஹ முண்டாகவேணு மென்று ப்ரஸாதித்தான்.

நாச்சியார் திருமொழி 9—3. கருவிளை யொண்மலர்காள்.

(எனக்கு) நஞ்சீயர் ஸுந்தரபாண்டிய தேவரைக் கண்டிராநிற்கச் செய்தே *குணைர் தசரதோபம: * என்கிறவிடத்துக்கு, பிறந்துபடைத்த குணங்களும் ஸ்வாபாவிக குணங்களுமெல்லாம் கூடினுலும் அரைமட்டேயாய் சக்ரவர்த்தி திருமகன் என்னப்போருமித்தனை என்றருளிச் செய்ய, பரமபுருஷனுக்கு ஒருவன் வயிற்றிலே பிறந்து ஓரேற்ற முண்டாகவேணுமோ ? அவன் பிறக்கையாலே அக்குடிதனக்கும் ஏற்றமாமித்தனையன்றே ? என்றூனும். நாம் போன ஸமாதி இவனறிந்திலனென்றுபார்த்து அதெல்லாம் கிடக்கச் செய்தே பரமபுருஷன் என்னும்படி என்தான் ! என்றூராம். ஸ்ரீவிபீஷணுழ்வானை ப்ரஸங்கித்தவாறே 'விபீஷணனேதான் அழகிதாகச் செய்தான் ! ஆபத்ஸமயத்திலே ப்ராதாவை விட்டுப் போந்தானே என்றூனும். எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க வொண்ணுதென்று பிதாவும் ஜ்யேஷ்டனை ப்ராதாவும் சேரப் போனவன்று ப்ராதாவை அநுவர்த்திக்கக் கடவன் ; பிதாவோடே விரோதித்தவன்று ஜ்யேஷ்டப்ராதா வென்று பாராதே பிதாவை யநுவர்த்திக்க வேணும் என்றருளிச் செய்தார்.

நாச்சியார் திருமொழி 9—6. நாறு நறும் பொழில்.

(வாய் நேர்ந்து) 'நூறுதடாநிறைந்த வெண்ணெய்' என்று பெண்பிள்ளை ப்ரார்த்தித்து வைத்தாள்; கொடுத்தாளாகச் சொல்லக் கேட்டிலோம்; பாரித்தவற்றை யிறுக்கை அஸ்ஸந்தாநஜாதர்க்கு பரமிறே என்று தாம் அமுது செய்யப் பண்ணியருளி னாராம். (எம்பெருமானார்.)

* அங்யத் பூர்ணுதபாம் கும்பாதங்யத் பாதாவநேஜநாத் * என்கிறவஸ்துவுக்கு நூறுத்டா நிறைந்த வென்று இங்ஙனே போரச் சொல்லுவானென்? என்று நான் ஜீய ரைக் கேட்டேன்; திருவாய்ப்பாடியிலேச்வர்யத்துக்கு இதெல்லாம் கூடினாலும் ஒரு பூர்ணகும்பஸ்தாநீய மென்றருளிச் செய்தாரென்று அருளிச் செய்வர்.

(ஏறு திருவுடையான்) வங்கிப்புரத்து நம்பி ஸ்ரீ பாதத்திலேயாயிற்று சிறியாத் தான் ஆச்ரயித்தது. போசள ராஜ்யத்தில் நின்றும் வந்தநாளிலே ராஜகேஸரியிலே ஆச்சான் நடந்திருந்தானாய், காணவேணுமென்று அங்கே சென்று கண்டிருக்கிறவள விலே, நம்பி எனக்கிங்ஙனே பணிக்கக் கேட்டேன்;—"பாஹ்யஸமயங்களிலுள்ளாரும் ஒருவஸ்துவைக்கொண்டு அது தனக்கு ஜ்ஞாநாதிக்யத்தையு முண்டாக்கிக்கொள்ளா நின்றார்கள்; அவர்களிற் காட்டில் வைதிகஸமயமான நமக்கேற்றம், 'ச்ரிய: பதியா ச்ரயணீயன்' என்று பற்றுகிற விதுகாண்" என்று பணித்தானும்.

நாச்சியார் திருமொழி. 9-8. 'காலையெழுந்திருந்து'—

(காலையெழுந்திருந்து) ஆச்சான் பணித்ததாக ஜீயரருளிச்செய்யும்படி;—"இவள் பிறந்த வூரில் திர்யக்குக்களுக்குத்தான் வேறு போதுபோக்குண்டோ? கண்ணுறக்கந்தா னுண்டோ" என்று.

நாச். 10-ஆம் திருமொழி. கார்க்கோடல் ப்ரவேசம்.

அவன் "நத்யஜேயம்" என்றாலும், "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட" என்பார் வேணுமிறே. பட்டர், வாணவதரையனைக்காண வெழுந்தருளி ஸ்ரீதேவி மங்கலத்திலே யிருக்கச்செய்தே, அங்குத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸம்ப்ரமங்கண்டு அருளிச்செய்த வார்த்தை.

இங்கு அரும்பதவுரையிலுள்ள விவரணம்;—"அருளிச்செய்த வார்த்தையா வது, பெருமாளிருக்க உம்மிடத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் இத்தனை ப்ரதிபத்தி பணணு கைக்கு ஹேது வேது? என்று தடஸ்தர் கேட்க, பகவல்லாபத்துக்கு பாகவதர் கடகரா கையாலே ஆழ்வான் ஸம்பந்தத்தைப் பற்றச் செய்தார்கள்—என்றருளிச் செய்த வார்த்தை".

நாச்சியார் திருமொழி 10—2. மேல்தோன்றிப்பூக்காள்.

(மாற்றாலேப்பட்டவர் கூட்டத்து.) இதுக்குத் திருமலைநம்பி பணிக்கும்படி —தான் பிரிவாலே நொந்தபடியாலே * ஜராமரண மோக்ஷாய * என்று ஆச்ரயிக்கும் திரளின் நடுவே என்னைக் கொடுபோய் வைக்கவல்லையே யென்கிறாள்—என்றருளிச் செய்வர். ... கேவலர் தனித்தனியேயாய்த்து அநுபவிப்பது; திரளாயிருக்கக் கூடாது என்று எம்பாரருளிச் செய்யும்படி. மாற்றாலேப்பட்டவர் கூட்டமாகிறது அடியார்கள் குழாங்களாய், என்னை அத்திரளின் நடுவே கொடுபோய் வைக்கவல்லையே என்கிறா ளென்று. ...... அங்ஙனன்றிக்கே ஆப்பான் பணிக்கும்படி; ஆழ்வான் பணிக்கக் கேட் டிருக்கவுமாமிறே; அவன் கொடுவரச் சொன்னவர்களைத் தவிர்ந்து மாற்றாலேப் பட்டோ மென்றவர்கள் திரளிலே என்னை வைக்கவல்லையே யென்கிறா ளென்று.

நாச். 10—5. பாடுங்குயில்காள்.

(வந்தருள் செய்து கூடுவராயிடில்) சிசுபாலனும் எம்பெருமானைப் பெற்றானிறே என்றார்களாய் ஆளவந்தார் கோஷ்டியிலே; 'அவன் பெற்றத்தைப் பேறாகச் சொல்ல வொண்ணாது; ருசிமுன்னாகப் பெறும் பேறாயிற்று பேறாவது; அவனிருக்கில் நாடழியு மென்று கொற்றவன் வாசலுக்குள்ளே சுழற்றி யெறிந்தானத்தனை காண்" என்றாராம்.

'பெரிய தேவப்பிள்ளை' என்று பட்டர் ஸ்ரீபாதத்திலே வர்த்திப்பா னொருவ னுண்டு. அவன் அகத்திலுள்ளா ரெல்லாரையும் அடர்த்து வார்த்தை சொல்லிக்கொண்டு போரும்; அவன கிழக்கே கார்ய முண்டாய்ப் போனவளவிலே; நஞ்ஜீயர், "அவன் போனபடியாலே அகத்திலுள்ளவர்கள் சில நாளைக்குப் பிழைத்தார்களிறே" என்றாராம். அத்தைக் கேட்டருளி, "நம்மோடேயொரு ஸம்பந்தத்தைச் சொல்லி நாட்டை ஹிம்ஸிக்கு மதில் நம்மைத் தேய்த்துத் தின்றாகிலும் இங்கே கிடக்கை யழகிய தன்றோ? என்றருளிச் செய்தார்.

10-6. 'கணமாமயில்காள்'—

....அம்மணியாழ்வான், ஒருவனுக்கு ஹிதத்தைச் சொல்லி அவன்காலிலே தெண்டனாகக் கிடக்குமாம். "நாம் ஒருவனை வைஷ்ணவனென்றன்றோ ஆதரிக்கிறது, நம் நெஞ்சறிந்த வைஷ்ணவனன்றோ விவன்" என்று. அத்தை ஜீயர்கேட்டருளி, "அது அவன் செய்தானேயாகிலும் சிஷ்யனுக்கு அநர்த்தம்" என்றாராம்; "இவன் தெண்ட னிடாதவன்றாக அவன் இன்னாதாகத் தொடங்குமிறே, அவிவேகியாகையாலே."

"அதுவென்? இவன் விவேகியாயன்றோ தன்னையவனுக்கு இஷ்ட விநியோ, கார்ஹமாக்குகிறது. அவனுடைய விநியோகப்ரகாரங்கொண்டு கார்யமென் நமக்கென்று தன்னையங்கே நிவேதித்தன்றோ வைப்பது" என்றானும் பிள்ளான்.

...பிள்ளை திருநறையூரரையர், பட்டர் சிலவார்த்தை யருளிச்செய்யக்கேட்டு, "இற்றைக்கு முன்பு ஓராசார்யன் பக்கலிலும் இவைகேட்டறியோம்" என்றாரய், "பிள்ளாய்! முன்பும் இவ்வார்த்தை சொன்னாருண்டு காணும், ஒரு திர்யக்கைத் திரு நாமத்தைக் கற்பித்து பின்னை அதின் வாயிலேகேட்டு அதின் காலிலே விழுந்தாரு முண்டு காணும்" என்றருளிச்செய்தாராம்.

10-8. 'மழையே மழையே'

(அவதாரிகை) திருமலை நம்பி, இவ்விரண்டுபாட்டையும் ஆதரித்துப் போருவ ராய். அவ்வழியாலே நம்முடையவர்களெல்லாரு மாதரித்துப்போருவர்கள்; இப்பாட் டையும் மேலிற்பாட்டையும் அநுஸந்தித்து, கண்ணும் கண்ணீருமாய் ஒருவார்த் தையும் சொல்லாதே வித்தராயிருப்பராம்.

10-10. 'நல்லவென்தோழி'—

(வில்லி யித்யாதி—தங்கள் தேவரை) ... "தங்கள் தேவரை" என்று தன்னோடு ற வறுத்துப் பெரியாழ்வாரோடே சேர்த்துச் சொல்லுகிறாள். பெரியாழ்வாருக்குத் தேவ ரென்றாயிற்று உகந்தது; த்ரிபுராதேவியார் வார்த்தையை நினைப்பது.

11-5 'பொல்லாக் குறளுருவாய்'—

(வ்யாக்யாநாந்தரத்தில் வார்த்தை)

(நளிரரங்கம்) ... பட்டரை முதுகில் புண்ணாலே நொந்துகிடக்கச்செய்தே அருள் பாடிட்டு பெருமாள், "வாராய்! அஞ்சினாயோ" என்று கேட்டருள; "நாயன்தே!

எனக்குச்செய்து தந்தருளாத தரமில்லை; இங்கே யிருக்கச்செய்தேயும் பாமபதம் என் சிறுமுறிப்படி செல்லும்படி பண்ணியருளிற்று; அதிலொரு குறையுமில்லை. இங்கே குளிர்ந்த முகத்தையும் திருநாமத்தழும்பையும் முறுவலையும் இழக்கவென்றால் அடியேனஞ்சேனோ" என்றார்.

ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி, ஓரளவிலே திருக்கோட்டியூர் நம்பியை நெகிழ ஒரு வார்த்தை சொன்னாராய், 'நீ கடக்க வர்த்தி' என்றருளிச்செய்ய, அவரும் படைவீட்டிலே ராஜஸேவை பண்ணித் திரிந்தாராய், பின்பு இவருடைய சரம ஸமயத்திலே இவருடைய அத்யவஸாயமறிய வேணுமென்று, "நீ நினைத்துக்கிடக்கிறதென்?" என்று கேட்டார்களாய்; "ஆளவந்தார் ஸ்ரீபாதத்தின் ஸம்பந்தம் பரமபத ப்ராப்தி பண்ணித்தந்தல்லது விடாது; அங்கே போனால் ஸ்ரீவைகுண்டநாதன் முகம் நம்பெருமாள் திருமுகமண்டலம்போலே குளிர்ந்திருந்த தில்லையாகில் முறிச்சுக்கொண்டு வருவதாக நினைத்திருந்தேன்" என்றாராம். 'நச புநராவர்த்ததே" என்கிற மர்யாதையை இடறிப் போரவேணுமே" என்றாராம்.

11-6. 'கைப்பொருள்கள்'—

ஒருநாள் பரத்வமே பிடித்து ஸௌலப்யத்தளவும் செல்ல வுபபாதித்தருள, அத்தைக்கேட்டு எம்பார், கண்ணுங்கண்ணீருமாய் வித்தராயிருக்க, அவரைப் பார்த்தருளி, "அவனுடைய ஸௌலப்யத்தைச் சொன்னவாறே நாட்டார் 'இத்தனை எளியவனோ' என்று கைவிட்டுப்போனார்கள்பாக்யஹாநியாலே. 'அறப்பெரியவன் இப்படி எளியவனாவதே!' என்று நெருங்குகைக்குடலாயிற்று உமக்கொருவர்க்கும்" என்றருளிச் செய்தருளினாராம்.

'வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே'. 'ஏதத் வ்ரதம் மம' 'நத்யஜேயம் கதஞ்சந' என்றதுக்கு "இருவரும் சரணாகத பரித்ராணம் பண்ணுகிறார்கள்" என்று பட்டர்.

(என்னித்யாதி) * * * திருமாலையாண்டான், "ப்ரக்ருதி ப்ராக்ருதங்களை த்யாஜ்யமென்று கேட்டுப் போராநிற்கச்செய்தேயும், இத்தை விடவேண்டியிருக்கிறதில்லை, ஆளவந்தார் ஸ்ரீபாதத்தை யாஶ்ரயிக்கைக் குறுப்பாமென்று ஆதரியாநின்றேன்" என்றாராம்.

12-2. 'நாணியினியோர்'—

(அறிந்தொழிந்தார்) இவள்தான் திருக்கோட்டியூர் நம்பியைப்போலே "பகவத் விஷயம் ஒருவரா லறியலாகாது" என்று மறைத்துக்கொடுபோருமவ ளொருத்தி போலே காணும்.

நம்பிதாம் ஒருதிண்ணையிலே ஒருவருமறியாதபடி பகவத் குணாநுஸந்தானம் பண்ணியிருப்பர்; எம்பெருமானார் எழுந்தருளி "நம்பிமடமேது" என்றுகொண்டு தெண்டனிட்டவாறே, அங்குள்ளார், "எம்பெருமானார் நம் திருக்குருகைப் பிரானகத்தை நோக்கித் தெண்டனிடாநின்றார்" என்றபின்பிறே நம்பியுடைய ப்ரபாவம் அங்குள்ளாரறிந்தது. ஆழ்வானும் ஆண்டானும் ஓராறு மாஸம் ஸேவித்திருந்த ஸந்நிவேஶத்தைக் கண்டு போரும்போது ஒருவார்த்தை கேட்டுப்போருவர்களே; ஆழ்வான் ஒருவிசை ஆறுமாஸம் ஸேவித்து நின்று போரப்புகாநிற்கச் செய்தே, ஆழ்வானை, "நம்மாழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே" என்று பணித்தாராம்; "அடியேன் க்ருதார்த்தனானேன்" என்று போந்தானும். "என்னுள்ளான்" என்று அஹமர்த்தத்தை நிஶ்சயிக்கிறவிடத்திலே "அடியேன்" என்று சேஷத்வத்தை நிரூபகமாகச் சொல்லுகிறதிறே.

12-3. 'தந்தையும் தாயும்'—

(மாயவன் வந்துருக்காட்டுகின்றான்)...."த்ருஷ்ட்வா ஸ்தித்வா பஹிர்குரும்" என்கிற விடத்துக்கு பட்டரருளிச்செய்யும்படி,—"திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தில் இவளைப்போலே புதியாரில்லை" என்று.

(அப்பாட்டிலேயே ஈற்றடிக்கு.)

"நந்தகோபாலன் கடைத்தலை". என்றால் ப்ரஸித்தமிறே-பட்டர் அருளிச்செய்வரென்று; இவனாலே புண்பட்டபெண்களுடையக் கட்டணங்களும் கையும் பசும்துவலுமாயாயிற்று அவர் வாசல். விஷம் தீர்ப்பார் வாசல்போலே.

12-5. 'ஆர்க்குமென்னோய்'—

(போர்க்களமித்யாதி) "இதுக்கு பட்டரருளிச்செய்ய நான்கேட்டேன்" என்று அருளிச்செய்வர்;—"காளியன் தலையிலே க்ருஷ்ணன் பாய்ந்தான்" என்றுகேட்டார் கேட்டவிடங்களிலே ஆழவிழுந்ததாயிற்று; பொய்கையளவும் கால்நடை தந்துபோய்ப் புகவல்லாரில்லையாயிற்றிறே. அனந்தாழ்வான் 'எம்பெருமானாரைக் காணவேணும்' என்று வாராநிற்கச்செய்தே, வடகரையளவிலே வந்தவாறே "திருநாட்டுக்கு எழுந்தருளினார்" என்று சில ஏகாங்கிகள் தலைகளையும் சிரைத்து ஏறினார்கள்; அவர்களைக் கண்டு ஸ்ரீநம்பி குஹதாஸர், மரத்திலேயேறி விழுவதாக வேறினாராய், "தெளிந்து ஏறின நீ சாவமாட்டாய்காண், போந்திழி" என்றானும்.

12-9. 'கூட்டிலிருந்து'

(கோவிந்தா கோவிந்தா)..."இது சோற்றுச் செருக்காலேயிறே இப்படி சொல்லுகிறது, அத்தைக் குறைக்கவே தவிருகிறது" என்று பட்டினியே விட்டுவைத்தாள்; "ஊணடங்க வீணடங்கும்" என்றிறே இவள் நினைவு. விண்ணப்பம் செய்வார்கள் மிடற்றுக்கு எண்ணெயிட்டுப் பட்டினி விட்டு மிடற்றில் கமாற்றிப் பாடுமாப்போலே, உயரப்பாடுகைக்கு உடலாய்விட்டது. என்றருளிச்செய்வர்.

13-1. கண்ணனென்னுங் கருந்தெய்வம்.

(கிடப்பேனை) "'கிடந்தகிடையிலே பாடோடிக் கிடந்தாளாகாதே' என்று அகளங்கநாட்டாழ்வான் வார்த்தை" என்றருளிச்செய்வர்.

(பெண்ணின் வருத்த மித்யாதி) மூலையெழுந்தார் படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே" என்று பட்டரருளிச்செய்தாராக ப்ரஸித்தமிறே.

(அரையில் பீதகவண்ண வாடைகொண்டு) "மேலிட்ட வுத்தரீயமானலாகாதோ" என்று நஞ்சீயர் கேட்க; "ஸ்வேதகந்தலுப்தைபோலேகாண்" என்றருளிச் செய்தாராம்.

13-6. 'நடையொன்றில்லா'—

(நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை யுய்த்திடுமின்) என்று ஆற்றுமை கரைபுரண்டால் பொகடச்சொல்லுவதும் அவர் வாசலிலே. ஸ்ரீநந்தகோபர் தாம், சிறியாத்தானைப்போலே பரம தார்மிகராயிறே யிருப்பது.

(கொடிய கடிய திருமாலால்) ...'அருளாத திருமாலார்க்கு' என்றதுக்கு புருஷகாரமாக அநுஸந்திக்கிறார்" என்று முன்புள்ள முதலிகள் அருளிச்செய்யும்படி. 'பிள்ளானை இதுக்குக் கருத்தென்? என்று நான்கேட்டேன்; 'இப்படி நம்மை நலி

கைக்கு குருகுல்வாஸம் பண்ணிற்று அவளோடேயன்றோ' என்று பணித்தார்; இத்தை பட்டர்க்கு விண்ணப்பஞ்செய்தேன்; 'பேற்றுக்கடி அவளென்றிருந்தால் இழவுக்கும் அடி அவளென்று வெறுத்து வார்த்தை சொல்லத் தட்டுண்டோ' வென்றார்" என்று நஞ்சீயரருளிச்செய்யும்படி.

14-1. 'பட்டிமேய்ந்தோர்'—

(பட்டிமேய்ந்து) பரமபதத்தில் கட்டுண்டிருப்பாரோபாதியாய், ஸ்வைரஸஞ்சாரம் பண்ணுவது அவதரித்துப் போந்தவிடத்தே யாயிற்று. 'வானிளவரசு' என்கிற படியே—"திருவனந்தாழ்வான் மடியிலும், ஸ்ரீ ஸேநாதிபதியாழ்வான் பிரம்பின்கீழிலும் பெரியதிருவடி சிறகின்கீழிலுமாயிற்று இத்தத்வம் வளருவது" என்றாயிற்று பட்டரருளிச்செய்வது.

(இட்டீறிட்டு) "'அவாக்யநாதர:' என்கிற தத்வம் 'இட்டீறிட்டு' என்னும்படியிருப்பதே! என்று சிறியாத்தான் போரவித்தராயிருக்கும்" என்று அருளிச்செய்வர்.

14-3. 'மாலாய்ப் பிறந்த'

(மேலாலித்யாதி) மேலேபரந்த வெய்யிலை நோக்குகைக்காக. "'வினதை சிறுவன்' என்றபடி என்தான்! ஆண்டாள்" என்றருளிச்செய்வர் வித்தராய்.

14-4. கார்த்தண் கமலம்'—

(கார்த்தண் கமலக்கண்ணென்னும்)...'மேகஶ்யாமம்' என்னும்படியிறே வடிவுதானிருப்பது. "கைகேயி வயிற்றிலே பிறந்த தாபமாறுங்கிடீர் குளிர்ந்த வடிவிலே விழிக்கப்பெற்றோனாகில்" என்கிறானென்றிறே அருளிச்செய்வது.

14-9. 'நாட்டைப் படையென்று'—

"அயன்றன்னைத் தந்த" என்று பாடமானபோது இவ்வருகுண்டான கார்யவர்க்கத்தையடைய நீயுண்டாக்கென்று சதுர்முகனைத் தந்தவென்றாகப்பெறில் அழகிது என்று போரவிரும்பி யருளிச்செய்வர். ... ... *

ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலையில் நாச்சியார் திருமொழி

வியாக்கியான ஸங்க்ரஹம் முற்றிற்று.

பெருமாள் திருமொழி

2—4. 'தோய்த்த தண்டயிர்'—

(மெய்தழும்பத் தொழுது) ப்ராணாமம் பண்ணினபடி தோற்ற உடம்பெல்லாம் தழும்பாகச் சிறியாத்தானைப்போலே யேத்தி.

4—10. 'உம்பருலகாண்டு'—

(ஏதேனுமாவேனே) அனந்தாழ்வான் இவ்விடத்துக்கு "திருவேங்கடமுடையான்றானாகவு மமையும்" என்னும்; அதுக்கு ஹ்ருதயமென்னென்னில்; சேஷபூதர் திரளுக்குப் புறம்பான சேஷியாகிலு மமையுமென்கை. அங்ஙனன்றிக்கே பட்டர் அருளிச்-